வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | Reg. No. : P. 1632 | விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 13.02.2024 செவ்வாய்க்கிழமை | இதழ் : 44 | பக்கங்கள் : 12

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## 500 ஏக்கர் சுவீகரிப்பை தடுத்து நிறுத்திய மக்கள்

### வலி. வடக்கில் விமான போக்குவரத்து அதிகார சபையின் முயற்சி பிசுபிசுப்பு



யாழ்ப்பாணம், பெப்ரவரி 13

**வலிகாமம் வடக்கில் மக்களின் வாழ்விடங்களில் இருந்து 500 ஏக்கர் காணிகளை சுவீகரிக்க எடுக்கப்பட்ட முயற்சி நேற்று அப்பகுதி மக்களால் முறியடிக்கப்பட்டது.**

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி என்னும் பெயரில் மேலும் 500 ஏக்கர் நிலத்தைச் சுவீகரித்துத் தருமாறு விமான போக்குவரத்து அதிகார சபை கோரிக்கை விடுத்தது எனக் கூறியே இந்த முயற்சி இடம்பெற்றது.

இதற்குத் தாம் ஏற்கனவே கடும் எதிர்ப்பை வெளியிட்டு அவசர சந்திப்புக்கு மாவட்ட அரச அதிபருக்கு எழுத்தில் கடிதம் வழங்கிய போதும் அவர் வாய்மூடி மௌனியாக இருக்கின்றார் என்றும் அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியி 11

**நிஷாந்த மரணம்:**

## சி.ஐ.டி. விசாரணை ஆரம்பம்

கொழும்பு, பெப். 13

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோரின் மரணம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் மனித கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான விசாரணைப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதன்படி, இந்த விபத்து இடம்பெற்ற போது, அந்த வாகனத்துக்கு முன்னால் பயணித்த கொள்கலன் வாகனத்தின் சாரதி நாரஹேன்பிட்டியிலுள்ள குறித்த விசாரணைப் பிரிவுக்குச் சென்று 5 மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரின் பாதுகாப்பு அதிகாரிக்கு மரணத்தை ஏற்படுத்திய 11

## தமிழ் அரசுக்குள் இணக்கப்பாடு

### செயலாளர் பதவியை பகிர முடிவு
### தேசிய மாநாட்டுக்கும் ஏற்பாடு

கிளிநொச்சி, பெப். 13

தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தெரிய வந்துள்ளது.

கட்சியின் புதிய தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் மாநாடு நடைபெறவுள்ளது.

இதேவேளை, தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியானது முதல் ஒரு வருடத்துக்கு குகதாசனுக்கு வழங்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ள நிலையில் மாநாட்டுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் புதிய பொதுச் 11

## சஜித் அணி முக்கிய ஒப்பந்தம் 14ஆம் திகதி கைச்சாத்தாகிறது

கொழும்பு, பெப். 13

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைமைகளுக்கு இடையிலான முதல் கட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் எதிர்வரும் 14 ஆம் திகதி கைச்சாத்தாகவுள்ளது.

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் இதனை தெரிவித்தார்.

இதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விரைவில் இலங்கையில் தேசிய தேர்தல்கள் நடைபெறும் என்ற அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையில், கொழும்பு அரசியல் களம் சூடுபிடித்துள்ளது.

இந்தப் பின்னணியிலேயே, ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைமைகளுக்கு இடையிலான முதல் கட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தெரிவுக்குழு தலைவர் பதவியிலிருந்து என்னை நீக்கியது பழிவாங்கும் செயல்

### சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 13

அரசுக்கு ஆரம்பத்தில் இருந்து பில்லியன் கணக்கில் இலாபத்தை பெற்றுக் கொடுத்த பாராளுமன்ற வழிமுறைகள் மற்றும் விதிமுறைகள் தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து தன்னை நீக்கியது பழிவாங்கும் செயல் என பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய குடியரசு கட்சியின் தலைவருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சாராய முதலாளிகளும் சீனி கொள்ளையர்களும் அரசியல்வாதிகளை தமது கைப்பாவைகளாக பயன்படுத்தி தன்னை அந்த பதவியில் இருந்து நீக்கியுள்ளனர் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அண்மையில் பாராளுமன்றத்தில் 11

**எட்கா ஒப்பந்தம்**

## கைச்சாத்திட அரசு முடிவு!

கொழும்பு, பெப். 13

இலங்கை - இந்தியாவுக்கு இடையிலான உத்தேச பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுகளை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் முடிவுக்கு கொண்டுவர இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன என்று இராஜதந்திர வட்டாரங்களின் மூலம் அறிய முடிகிறது.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர், சீனாவுடன் இலங்கை அரசாங்கம் நெருக்கமான உறவை பேணியதுடன், இந்தியாவுடனான உறவுகளிலும் சில முறுகல்களை ஏற்படுத்திக்கொண்டது.

என்றாலும், 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்த பின்னர் இந்தியாவுடன் இலங்கை 11

## இந்தியாவுடன் உறவு மேலும் பலமடையும்!

### ஜனாதிபதி ரணில் கூறுகிறார்



கொழும்பு, பெப். 13

இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தி அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய விடயமே இந்த பணப் பரிமாற்ற முறை ஆகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 11

## பொருளாதாரத்தை மீட்பதற்கு மாற்றுவழி இருப்பின் கூறுங்கள்

### பேச்சு நடத்த தயார் என்கிறார் பந்துல

கொழும்பு, பெப். 13

இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார வேலைத் திட்டத்தைத் தவிர்த்து வேறு மாற்று வழிகள் இருப்பின் எந்தவொரு குழுவுடனும் பேச்சுவார்த்தைக்குத் தயார் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரச நிதி முகாமைத்துவம் தொடர்பில் போதிய அறிவு இல்லாத குழுக்கள் மக்கள் முன்னிலையில் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது வெறும் வார்த்தைகளால் முடியாத செயல் எனவும் அமைச்சர் கூறினார். 11

## சீனாவுடன் கொடுக்கல்-வாங்கலை நிறுத்த சொல்லவில்லை இந்தியா!

### அடித்துக் கூறுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, பெப். 13

'சீனாவுடன் கொடுக்கல் - வாங்கலில் ஈடுபட வேண்டாம் என இந்தியா எம்மிடம் கூறவில்லை. அது பற்றி பேச்சு நடத்த நாமும் முற்படவில்லை. எனினும், பிராந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் விடயங்களுக்கு அனுமதியளிக்க மாட்டோம் என்பதை நாம் கூறினோம்."

- இவ்வாறு 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

தெற்கில் இருவர் சந்தித்தால், அது எந்தத் துறை சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களின் பேசுபொருள், ஜே. வி. பியின் இந்திய விஜயம் பற்றியதாகத்தான் இருக்கின்றது.

தெற்கு நண்பர் ஒருவர் கேட்டார், அதுபற்றி வடக்கில் என்ன சொல்கிறார்கள் என்று.

ஜே. வி. பி. ஓர் ஆயுத இயக்கமாக இருந்தபோதும் சரி, இப்போது ஜனநாயக நீரோட்டத்தில் இருக்கும் போதும் சரி, அது இந்திய எதிர்ப்பையே தனது மூலதனமாகக் கொண்டிருந்தது.

ஆய்வாளர் நிலாந்தன் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்ததுபோல, இரண்டு வருடங்களுக்கு முன்னர் 'அறகலய' போராட்டத்தின் பின்னால் ஜே. வி. பி. இருந்தபோதும் இந்திய எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தது. 'அறகலய' போராட்ட களத்தில் காணப்பட்ட சுலோகங்களில் இந்திய எதிர்ப்பு சுலோகங்களும் காணப்பட்டன. அதில் இந்திய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான என்ற வாசகமும் காணப்பட்டது. அதாவது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரும் ஜே. வி. பியின் நிலைப்பாடு இந்திய எதிர்ப்பாகவே இருந்தது என்கிறார் நிலாந்தன்.

அத்தகைய ஜே. வி. பியை இந்தியா தனக்குத் தேவை என்று நினைக்கின்றபோது அழைத்திருப்பது தமிழர்களுக்கு புதிய செய்தியைச் சொல்லியிருக்கின்றது என்று அந்த தெற்கு நண்பருக்கு விளக்கமளித்தேன்.

இந்தியாவை மட்டுமே தமிழர்களின் 'ஆபத்பாந்தவனாக' நினைத்துக்கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகள், தமது அரசியல் எதிர்காலம் குறித்துக்கூட சிந்திக்காமல், இந்தியப் பிரதமரிடம் தமது கோரிக்கைகளை முன்வைப்பதற்காக அவரைச் சந்திக்க அனுமதிகேட்டு கடிதம் எழுதிவிட்டு வருடக்கணக்காக காத்திருக்கின்றன. ஆனால், அதனைக் கண்டுகொள்ளாத இந்தியத் தரப்பு-

இந்தியாவை தமது எதிரியாக வரிந்துகட்டிக் கொண்டு அரசியல் செய்யும் ஜே. வி. பியை அழைத்திருப்பது, வடக்கில் தமிழர்கள் மத்தியில் புதிய சிந்தனையை ஏற்படுத்தியிருக்கின்றது என்று அந்தத் தெற்கு நண்பருக்கு விளக்கமளிக்க வேண்டியிருந்தது.

தமிழ் அரசுக் கட்சிக்கு புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவரை இந்தியா அழைத்திருப்பதாக சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றதே என்று அந்த சிங்கள நண்பர் கூறியபோது, இவையெல்லாம் உங்கள் சிங்கள ஊடகவியலாளர்களின் கற்பனைக்கதைகள் என்று அவருக்கு விளக்க வேண்டி வந்தது.

வடக்கின் கருத்து பற்றி கேட்ட அந்த நண்பரிடமே, தெற்கில் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டேன். அதற்கு அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விஜயம் குறித்து தமது நண்பர்கள் சிலருடன் கதைத்துக் கொண்டிருந்த போது சொன்னதை ஞாபகப்படுத்தினார்.

இந்தியா வழக்கமாக இதுபோன்ற நிலைமைகளில்- அதாவது நாடு ஒரு தேர்தலை எதிர்கொள்கின்ற காலங்களில் எப்போதும் எதிர்க்கட்சித் தலைவரைத்தான் அழைத்து நிலைமைகளை ஆராய்வதுண்டு. ஆனால், இந்தியா நமது எதிர்க்கட்சித் தலைவர்மீது நம்பிக்கையை இழந்து விட்டதைத்தான் இந்தச் சம்பவம் காட்டுகின்றது என்றாராம் ஜனாதிபதி ரணில்.

அந்த நண்பரே மற்றுமொரு சம்பவத்தையும் சொன்னார்:

கடந்த வாரம் ஜே. வி. பியின் பிரதிநிதிகள் சிலர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவை சந்திப்பதற்காக அமைச்சுக்கு வந்திருந்தனராம். ஜே. வி. பியின் முன்னாள் மாகாண சபை பிரதிநிதிகளும் அவர்களில் இருந்தனர். இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டிலிருந்து பதினைந்தாம் ஆண்டுவரை மேல் மாகாண முதலமைச்சராக இருந்தவர் அமைச்சர் பிரசன்ன. அவருடன் ஒரே காலத்தில் மாகாண சபை உறுப்பினர்களாக இருந்த சிலரும் அந்த ஜே. வி. பி. பிரதிநிதிகளுடன் வந்திருந்தனராம்.

'உங்கள் தலைவர் இந்தியாவில் அல்லவா?' என்று பிரசன்ன கேட்டிருக்கிறார்.

'அவர்களை பற்றி பேசுவதில் அர்த்தமில்லை. விஜயவீர தோழரின் ஜனதா விமுக்தி பெரமுன அல்ல தற்போது இருப்பது. இது அனுரவின் ஜே. வி. பி.' என்றார்களாம்.

விஜயவீர இப்போது இருந்திருந்தாலும் போயிருப்பாரோ என்னவோ என்று அமைச்சர் பிரசன்ன பதிலளிக்க, அதனை அடியோடு மறுத்தவர்கள், 'வாசுதேவ நாணயக்கார தோழர்கூட அமெரிக்கா அழைத்திருந்தால் அங்கு போயிருப்பாரா?' என்று திரும்பக் கேட்டார்களாம் அந்த ஜே. வி. பி. தோழர்கள்.

என்னவோ, இந்த இந்திய விஜயம் ஜே. வி. பிக்குள்ளும் தான் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதும் புரிந்தது.!

- ஊர்க்குருவி.

## கச்சதீவு திருவிழாவுக்கான ஏற்பாடு குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 13

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவானது யாழ் மாவட்ட செயலாளரின் ஒருங்கிணைப்பின் கீழ் ஆயர் இல்லம், இலங்கை கடற்படை, பிரதேச செயலகம், நெடுந்தீவு மற்றும் சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களினது முழுமையான ஒத்துழைப்புடன் எதிர்வரும் 23ஆம், 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

அந்தோனியார் ஆலய திருவிழா தொடர்பான ஏற்பாடுகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.

இந் நிலையில், திருவிழாவுக்கு வருகை தரும் மக்களுக்காக யாழ். மாவட்ட செயலகம் விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிவிப்பில் -

எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 5 மணி தொடக்கம் மு.ப 10 மணி வரை அரச பேருந்துகள் மற்றும் தனியார் பஸ்கள் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து குறிகாட்டுவான் வரை சேவையில் ஈடுபடும்.

கச்சதீவுக்கான படகுச் சேவையானது குறிகாட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய இறங்குதுறைகளில் இருந்து 23ஆம் திகதி காலை 5.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

குறிகாட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய இறங்குதுறைகளில் இருந்து பயணிக்கும் ஒரு நபருக்கான படகிற்குரிய ஒரு வழிப் பயணக் கட்டணம் ரூ.1500 ஆகும்.

வெளி மாவட்டங்களிலிருந்து தமது சொந்தப் படகுகளில் திருவிழாவிற்கு செல்வோர் தமது வசிப்பிடங்களிற்கு அருகிலுள்ள கடற்படை முகாம்களில் தொடர்புகொண்டு உரிய கடற்பயணப் பாதுகாப்பு அனுமதியினை பெற்றுக்கொள்வதுடன் படகுகளில் பயணம் செய்பவர்கள் தனித்தனிப் படகாக பயணத்தை மேற்கொள்ளாது குழுவாக இணைந்து பாதுகாப்பான முறையில் பயணிப்பதுடன் 23 ஆம் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கச்சதீவை வந்தடைவதற்கேற்றவாறு தங்களது பயணங்களை ஆரம்பிக்கவேண்டும்.

கச்சதீவு உற்சவத்தில் கலந்து கொள்ளும் யாத்திரிகர்கள் தங்களுக்கு தேவையான உணவு மற்றும் குடிதண்ணீர் ஏற்பாடுகளுடன் வருகை தருதல் வேண்டும்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயமானது யாத்திரிகர்களின் புனித தலமாகவுள்ளதால் மது பாவனைப் பொருட்கள் கொண்டு செல்லுதல் மற்றும் பாவித்தல் என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது- என்றுள்ளது. (அ)

## 200 வகையான மருந்துகள் தட்டுப்பாடு



கொழும்பு, பெப். 13

நாட்டில் சுமார் 200 வகையான மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாட்டு நிலை உருவாகியுள்ளதாக தெரிய வருகின்றது.

மிகவும் அத்தியாவசியமான 40 வகையான மருந்துப் பொருட்களும் ஏனைய 160 வகையான மருந்து வகைகளுக்கும் இவ்வாறு தட்டுப்பாட்டு நிலை உருவாகியுள்ளது.

மருத்துவ விநியோகப் பிரிவில் இந்த வகை மருந்துகள் கிடையாது என தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார அமைச்சில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது மருந்துப் பொருள் தட்டுப்பாடு தொடர்பிலான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சுமார் 300 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு காணப்பட்டதாகவும் தற்போது அந்த எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## சிங்கராஜ வனப் பகுதியில் வீதி அமைப்பு மனுவை விசாரிக்க நீதிமன்றம் அனுமதி!

கொழும்பு, பெப். 13

சிங்கராஜ வன வலயத்திற்குள் வீதி மற்றும் குளங்களை அமைப்பதற்கு கடந்த அரசாங்கம் எடுத்த தீர்மானத்திற்கு எதிராக சுற்றாடல் நீதி மையம் சமர்ப்பித்த மனுவை விசாரணை செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி, வனஜீவராசிகள் அமைச்சர் மற்றும் சுற்றாடல் அமைச்சர் ஆகியோர், பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஆரம்ப ஆட்சேபனைகள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

இதன்படி மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள வனஜீவராசிகள் அமைச்சர், சுற்றாடல் அமைச்சர், மத்திய சுற்றாடல் அதிகார சபை, வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனப் பாதுகாப்புப் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்டோருக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

கடந்த ஆட்சியில் சுற்றுச்சூழல் சிங்கராஜ வன பகுதியில் புதிய வீதி அமைக்கவும், ஏற்கனவே உள்ள வீதியை அகலப்படுத்தவும், குளங்கள் கட்டும் திட்டத்தை செயல்படுத்தவும் தயாராக இருந்ததாக மனுதாரர்கள் கூறுகின்றனர். இதுபோன்ற திட்டம் செயல்படுத்தப்பட்டால், சிங்கராஜ வனப் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதுடன், சுற்றுச்சூழலுக்கும் கடும் பாதிப்பு ஏற்படும் என மனுதாரர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

எனவே, இத்திட்டத்தை செயல்படுத்துவதை தடுக்கும் வகையில் அரசாணை பிறப்பிக்க வேண்டும் என மனுதாரர் மனுவில் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சர்வதேச சமூகத்தினரிடையே வலுவான உறவு பேணுவது இலங்கைக்கு மிகவும் முக்கியமானது

கொழும்பு, பெப். 13

சர்வதேச சமூகத்தினரிடையே வலுவான உறவுகளைப் பேணுவது இலங்கைக்கு மிகவும் முக்கியமானது என்றும் எதிர்காலத்தில் அந்த உறவுகளை மேலும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்திய இராஜதந்திர நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் இதனை கூறினார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 20 வெளிநாட்டு தூதரகங்களின் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது இலங்கைக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இடையில் வலுவான உறவுகளை வளர்த்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை அமைச்சர் வலியுறுத்தியுள்ளதுடன் இலங்கைக்கும் அதன் உலகளாவிய பங்காளிகளுக்கும் நன்மையளிக்கக்கூடிய ஒத்துழைப்புக்கான புதிய வெளியை உருவாக்குதல் தொடர்பிலும் தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைநோக்கு தலைமையின் கீழ், இலங்கை புத்துயிர் பெற்று சவால்களுக்கு மத்தியிலும் சுபீட்சத்திற்கும் வெற்றிக்கும் அர்ப்பணிக்கப்பட்ட பாதையில் பயணித்து வருவதாக ஐக்கிய அரபு இராச்சியத்துக்கான இலங்கைத் தூதுவர் உதய இந்திரரத்ன வலியுறுத்தினார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
13.02.2024 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், தை 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் கட்சிகள் ஓரணியாகாவிட்டால்?

ஜே.வி. பியின் இந்திய பயணம் பலரின் புருவங்களையும் உயர வைத்திருக்கின்றது. இத்தனைக்கும் ஜே. வி. பிக்கு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே உண்டு. ஆனாலும் ஒரு பிராந்திய சக்தி அவர்களை உத்தியோகபூர்வமாக அழைத்துப் பேசியிருக்கின்றது. தங்களை பிரதான சக்திகளென்று எண்ணிக் கொண்டிருக்கும் தென்னிலங்கையின் கட்சிகள் பலவற்றுக்கும் ஒரு செய்தியும் கிடைத்திருக்கின்றது. ஜே. வி. பியின் இந்திய பயணமானது சிதறியிருக்கும் தென்னிலங்கை தரப்புகளை ஒன்றுபடுத்தினால்கூட ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் பத்து பாராளுமன்ற ஆசனங்கள் உண்டு. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிடம் இரண்டு ஆசனங்கள் உண்டு. சி. வி. விக்னேஸ்வரன் - ஒரு முறை கூறியிருந்தார் - அரசியலை முன்னெடுப்பதற்கு ஆசனங்களின் எண்ணிக்கை முக்கியமல்ல – ஆனால், இன்றுவரையில் அவரால் எதனையும் நிரூபிக்க முடியவில்லை. - அவ்வப்போது நானும் இருக்கின்றேன் என்றவாறு, அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றவர்களை விடவும் தாங்களே சரியான - அதாவது, 24கரட் தேசியவாதிகள் என்பதுண்டு – அவ்வாறாயின் ஏன் எவரும் அவர்களை திரும்பிப் பார்க்கவில்லை என்பதற்கான பதிலையும் அவர்கள் தேட வேண்டும்.

இந்தியா தொடர்ந்தும் ஒரு விடயத்தை வலியுறுத்தி வருகின்றது – அதாவது, தமிழ் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் – விடயங்களில் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும். ஆனால், தமிழ் கட்சிகளுக்கோ இந்தியா சொல்வதை சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தியப் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டால் அனைத்தும் முடிந்துவிடும் என்றவாறே எண்ணிக் கொள்கின்றனர். ஒரு பெரிய விடயத்தை சாதித்துவிட்டதாக எண்ணிக் கொள்கின்றனர்.

இந்தியப் பிரதமருக்கு இதுபோன்று பல கடிதங்கள் அனுப்பப்படுகின்றன – அவ்வாறு அனுப்பப்படும் கடிதங்களுக்காக ஒரு பிராந்திய சக்தி அனைவரையும் சந்தித்துக்கொண்டிருக்க முடியாது. சந்திக்கக்கூடிய தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஜே. வி. பி. அதன் தகுதியை காண்பித்திருக்கின்றது. அதனால், அதனை தவிர்ப்பது பொருத்தமானதல்ல என்னும் புரிதலுக்கு இந்தியா வந்திருக்கின்றது. ஜே. வி. பியும் அதன் கடந்த கால தவறுகளை திருத்திக்கொண்டு, புதிய அரசியல் மாற்றங்களை புரிந்துகொண்டு இந்தியாவின் அழைப்பை சரியாக பற்றிப் பிடித்திருக்கின்றது.

மாற்றங்கள் மட்டும்தான் நிரந்தரமானவை. மற்றைய அனைத்தும் விடயமல்ல. ஜே. வி. பியின் கடந்த காலத்தை இப்போது இந்தியா பொருட்படுத்தவில்லை. இதனைப் போன்றதுதான் தமிழர் விவகாரமும். தமிழர் விவகாரத்தில் சில கசப்பான அனுபவங்கள் இந்தியாவுக்கு உண்டு. அது எவ்வாறான அனுபவங்கள் என்பது தொடர்பில், இனிப் பேசுவதில் பயனில்லை. அதேபோன்று, கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்கள் தொடர்பில் தமிழர்கள் பேசுவதிலும் இனிப் பயனில்லை. இதனை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

நம்மை சுற்றி இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மாற்றங்களை துல்லியமாக கணித்து – அதற்கேற்ப செயல்பட்டால் மட்டுமே, தமிழர்களால் முன்னோக்கிப் பயணிக்க முடியும்.

# தமிழக சினிமா கலைஞர் நிகழ்வுகள் தொடர்பில் யாழ். தலைமைகள் பொது முடிவெடுக்கவேண்டும்

## மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை

*கொழும்பு, பெப். 13*

"தமிழக சினிமா கலைஞர் நிகழ்வுகள் தொடர்பில் யாழ் தலைமைகள் கலந்து பேசி பொது முடிவெடுக்க வேண்டும் ." - என்று யாழ். முற்றவெளி சம்பவம் தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

இதுபற்றி மனோ கணேசன் தெரிவிததவை வருமாறு,

யாழ்ப்பாண முற்றவெளியில் நடந்த தமிழக சினிமா கலைஞர்களின் கலை நிகழ்வில் நடந்த துரதிர்ஷ்ட சம்பவங்களை கடந்து போகவேண்டும்.

இதை விட இசை நிகழ்வு கலவர பூமியாக மாறி, பலர் கொலையுண்ட சம்பவம் கொழும்பில், 2004ஆம் வருட டிசெம்பர் மாதம் நிகழ்ந்தது. பொலிவுட் நடிகர் ஷாருக் கான் கலை நிகழ்ச்சி நடத்த கொழும்பு வந்த போது, குண்டு வீசப்பட்டது. நடிகர், ஷாருக், அப்படியே திருப்பிக்கொண்டு விமான நிலையம் போனவர்தான். இன்று, அவரின் உலக வரைபடத்தில் இலங்கை இல்லையாம்.

அந்த வெடிப்பில், எனது சில நண்பர்கள் உட்பட பல ரசிகர்கள் இறந்தார்கள். பிரபல சோம தேரரின் நினைவு தினமன்று இந்த கலை நிகழ்ச்சி நடத்த ஏற்பாடாகி இருந்ததால், அந்த நிகழ்வை சிங்கள-பௌத்த தீவிர அமைப்பினர் எதிர்த்து போராடியதால், ஒரு பதற்ற நிலைமை அன்று நிலவியது. அதையடுத்து, இத்தகைய கலை நிகழ்வுகள் தொடர்பில், பல விதிமுறைகள் அமுலுக்கு வந்துள்ளன.

சினிமா ஒரு தொழில். அங்கே யாரும் கலை சேவை செய்யவில்லை. அது ஒரு பணம் புழங்கும் தொழில் என்பதால்தான், இன்று சினிமா பெரும் வளர்ச்சி அடைந்த தொழிலாகி உள்ளது. பணம் கொடுத்தால், சகாரா பாலைவனத்திலும் அவர்கள் ஆடல், பாடல், இசை நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். சினிமா, பணம் கொழிக்கும் வியாபாரம் என்பதால்தான் பல புலம் பெயர்ந்த இலங்கை தமிழர்களே அதில் இருக்கிறார்கள்.

கலைஞர்களை அழைத்தால் வருவார்கள். வர வேண்டாம் என்றால் வர மாட்டார்கள். இலங்கை வந்து செல்வது என்பது மிகப்பெரும் பணம் கொழிக்கும் முன்னணி வருவாய் இல்லை. பக்கத்தில் இருக்கும் நாடு என்பதால், சடுதியாக வந்துவிட்டு, ஆடி, பாடி, நிகழ்வு நடத்தி போகலாம் என்று வருகிறார்கள்.

இனி எம்.பிக்கள், மாவட்ட செயலாளர், பொலிஸ், யாழ். மாநகர சபை, சிவில் சமூகம் ஆகியோர் யாழ். மாவட்ட ஒருகிணைப்பு குழுவில் கூடி அமர்ந்து பேசி, இப்படியான நிகழ்வுகளுக்கு விதிமுறைகளை அறிவிக்கலாம். முழுக்க, முழுக்க ஏற்பாட்டாளர்களின் கைகளில் மட்டும் பொறுப்புகளை வழங்கிவிட்டு, ஒதுங்கக் கூடாது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்ட எம். பிக்களுக்கு மக்களின் பாதுகாப்பு தொடர்பில் பொறுப்பும், அதிகாரமும் உண்டு.

இளம் தலைமுறையினர், இசையை கேட்க, நட்சத்திரங்களைப் பக்கத்தில் போய் பார்க்கத்தான் ஓடி வந்தார்கள். அதற்குள் போதையில் சிலர் இருந்திருக்கலாம். இப்படியான ஒரு தரப்பு இளையோர் எங்கும் உள்ளார்கள். கொழும்பிலும், சென்னையிலும், லண்டனிலும், சிக்காக்கோவிலும் உள்ளார்கள். முற்றவெளியில், ஒலி அமைப்பு அரங்கத்தின் மீது இளையோர் ஏறி நின்றார்கள். பாரம் தாங்காமல் அந்த அரங்கு உடைந்து போயிருந்தால், பெரும் உயிர் சேதம் ஏற்பட்டு இருக்கலாம்.


இன்று, கொழும்பில் இந்த நிகழ்வுகள் நடக்கின்றன. தொடர்ந்தும் நடக்கும். யாரும் வந்து முறைப்படி பார்க்கலாம். அதற்கான கட்டமைப்புகள் இங்கே இருக்கின்றன. கொழும்பை போன்று, யாழில் உள்ளக, வெளியக அரங்க கட்டமைப்புகள் இல்லை. கொழும்பிலும், சுகததாச உள்ளக அரங்கில் அதிகபட்சம் ஐயாயிரம் பேர் கூடலாம். இலட்சக் கணக்கில்கூட உள்ளக அரங்கு சரிவராது. வெளியக விளையாட்டரங்குதான் சரி.

யாழில் கலாசார மண்டபத்தை ரூ. 200 கோடி அளவில் முதலிட்டு கட்டிக்கொடுத்த இந்திய அரசுக்கு அப்போது, இந்த முற்றவெளியை, கொழும்பு சுகததாச அரங்கம் மாதிரி கட்டிக்கொடுங்கள் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் யோசனை முன்வைத்து கூறி இருக்கலாம். இனியாவது, வெளிநாட்டு அரசுகளோ, புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளோ, இதை செய்யலாம். உள்நாட்டில் அடுத்த பல வருடங்களுக்கு பணம் இல்லை.

அடுத்து, "இது போர் நிகழ்ந்த பூமி, துன்பம் நிறைந்த பூமி, இங்கே ஆடல், பாடல், கச்சேரி வேண்டாம். அப்படியே, இருந்தாலும் அவை உரிமை கோஷங்களாக மட்டுமே இருக்க வேண்டும்" என்று கூறும் கருத்தும் சமாந்திரமாக இழையோடுகிறது. இது ஒரு தமிழ் தேசிய அரசியல் நிலைப்பாடு. இதை மறைக்க முடியாது. அப்படி இல்லை என்று கூறவும் முடியாது.

ஆகவே, இது தொடர்பிலும், அரசியல்வாதிகள், சிவில் சமூகத்தினர் இடையே கலந்துரையாடல் நடக்க வேண்டும். ஒட்டு மொத்தமாக மக்களின் நிலைப்பாடு இதுவாகத்தான் இருக்குமானால், விடை சுலபமானது. யாழ்ப்பாணத்தில் இனிமேல் தமிழக சினிமா கலைஞர்களை கொண்டு இத்தகைய ஆடல், பாடல், இசை நிகழ்ச்சிகளை நடத்தாமல் விடலாம்-என்றார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**பெப்ரவரி - 13 செவ்வாய்க்கிழமை**
**சோபகிருது வருடம் - மாசி 01**
**நல்ல நேரம் : 07.30 - 09.00**
**ராகு காலம் : 03.00 - 04.30**
**திதி : சூன்ய**




### மேடம்
கணவன் - மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. மறைமுக பிரச்னைகள் வந்து விலகும். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

### இடபம்
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.

### மிதுனம்
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

### கடகம்
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலைவாங்குவீர்கள். இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியானநாள்.

### சிம்மம்
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று நீங்கள் எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி வரும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

### கன்னி
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

### துலாம்
சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். அதிகாரிகள் முன்னுரிமை தருவார்கள். அமோகமான நாள்.

### விருட்சிகம்
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

### தனுசு
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

### மகரம்
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

### கும்பம்
உங்கள் குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்துக் கொள்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைபடும் நாள்.

### மீனம்
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பணிப்போர் வந்து நீங்கும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

*தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர்:*

# அரசு தயாரித்த உரையை புறக்கணித்தார் ஆளுநர் ரவி

*சென்னை, பெப். 13*

இந்த ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடர் நேற்று திங்கட்கிழமை கூடியது. அப்போது, தமிழக அரசு தயாரித்த உரையை வாசிக்காமல் ஆளுநர் ஆர். என். ரவி புறக்கணித்ததால் சலசலப்பு ஏற்பட்டது.

தமிழ்நாடு அரசின் உரையைப் படிக்காமல் புறக்கணித்திருந்தாலும் தொடர்ந்து அவையிலேயே அமர்ந்திருந்தார் ஆளுநர். அவர் புறக்கணித்த உரையை சபாநாயகர் அப்பாவு வாசித்தார்.



முன்னதாக பேசிய ஆளுநர், 'அனைவருக்கும் வணக்கம்' என தமிழில் கூறி தனது உரையை தொடங்கினார். பின்னர் அவர்,

"நான் திரும்பத் திரும்ப விடுக்கும் கோரிக்கையும், அறிவுரையும் இதுதான். தேசிய கீதத்துக்கு மரியாதை கொடுத்து தேசிய கீதத்தை கூட்டத்தின் தொடக்கத்திலும், முடிவிலும் இசைக்க வேண்டும். அரசின் இந்த உரையில் பல பத்திகள் உள்ளன. உண்மையின் அடிப்படையிலும், தார்மீக அடிப்படையில் இந்த உரையுடன் நான் உடன்படவில்லை. எனவே, இந்த அவையில் மக்களுக்கு நன்மை பயக்கும் விவாதங்கள் நடக்க வேண்டும் எனக் கூறி எனது உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்." என்று கூறி தனது உரையை முடித்தார்.

அப்போது அவையில் சில விநாடிகள் சலசலப்பு ஏற்பட்டது. அதற்குள் சபாநாயகர் குறுக்கிட்டு உரையைத் தான் வாசிப்பதாகக் கூறி வாசித்தார். சபாநாயகர் அப்பாவு உரையை வாசிக்கும் நேரத்தில், உரையைப் புறக்கணித்த ஆளுநர் ரவி, அவையிலேயே இறுக்கத்துடன் அமர்ந்திருந்தார். அவையில் இறுதியாக தேசிய கீதம் இசைக்கப்பட்டது. ஆனால், ஆளுநர் ரவி அதற்கு முன்னரே அவையிலிருந்து புறப்பட்டுச் சென்றார். (ஐ)

# இலங்கைக்கு உதவும் பிரதமர் தமிழகத்துக்கு உதவவில்லை!

## தி. மு. க. குற்றச்சாட்டு

*இராமேஸ்வரம், பெப்.13*

தமிழக மீனவர்களைத் துன்புறுத்தும் இலங்கைக்கு பிரதமர் மோடி உதவி செய்கிறார். ஆனால், வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு எந்த உதவியும் செய்யவில்லை என்று தி. மு. க. அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி குற்றம் சாட்டினார்.

இராமேஸ்வரம் பேருந்து நிலையம் அருகே நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு தி. மு. க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி தலைமை வகித்து பேசினார்.

2014 மக்களவைத் தேர்தல் பிரசாரத்தின்போது, பா. ஜ. க. ஆட்சிக்கு வந்தால் தமிழக மீனவர்கள் ஒருவர்கூட இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட மாட்டார்கள் என்று நரேந்திர மோடி வாக்குறுதி அளித்தார். ஆனால், கடந்த 10 ஆண்டுகளில் 3,076 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போதைய பாராளுமன்றக் கூட்ட தொடரில் மீனவர்கள் கைதுதொடர்பாக விவாதிக்க தி. மு. க. சார்பில் கவனவீர்ப்பு தீர்மானம் கொண்டுவர முயன்றபோது, அதற்கு மத்திய அரசு மறுத்துவிட்டது. இலங்கையில் பொருளாதார நிலை மோசமடைந்தபோது, மத்திய அரசு 34 ஆயிரம் கோடி (இந்திய) ரூபாய் வழங்கியது.

தமிழக மீனவர்களைக் கைது செய்து துன்புறுத்தும் இலங்கைக்கு பிரதமர் மோடி உதவி செய்கிறார். ஆனால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு எந்த உதவியும் செய்யவில்லை. வரும் மே மாதத்தில் புதிய ஆட்சி அமைந்தவுடன், ஜூன் மாதத்திலிருந்து தமிழக மீனவர்கள் பாதுகாப்புடன் கடலுக்குச் சென்று வருவார்கள் - என்றார். (ஐ)

# துணை முதல்வர் நியமானம் அரசமைப்புக்கு எதிரானதல்ல

## உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

*சென்னை, பெப். 13*

துணை முதல்வர் நியமனம் அரசியல் சாசனத்துக்கு எதிரானது அல்ல'' என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கூட்டணியுடன் ஆட்சி அமைக்கும் மாநிலங்களில் துணை முதல்வர் நியமனம் செய்யப்படுவர்.

முதல்வரின் பணிச்சுமை காரணமாகவும், துறைகள் பிரித்து கொடுப்பதற்காகவும் துணை முதல்வர் நியமனம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மாநிலங்களில் துணை முதல்வர்களை நியமிக்கும் நடைமுறையை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அமர்வு, "துணை முதல்வரை நியமிக்கும் நடைமுறை பல மாநிலங்களில் கடைப்பிடிக்கப்படுகிறது.

நீங்கள் யாரையாவது துணை முதல்வர் என்று அழைத்தாலும், அது ஓர் அமைச்சரைக் குறிக்கும். துணை முதல்வர் ஒரு மாநில அரசின் மிக முக்கியமான அமைச்சர். ஒரு மாநிலத்தில் துணை முதல்வர் நியமனம் அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானது அல்ல எனக் கூறி, பொது நல மனுவை தள்ளுபடி செய்தது.

# தனது கட்சி பற்றிய மக்கள் கருத்தை மாறுவேடத்தில் அறியும் நடிகர் விஜய்

*சென்னை, பெப். 14*

தமிழக வெற்றி கழகம் ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறித்து, மக்களிடம் நடிகர் விஜய் கருத்து கேட்டு வருகிறார்.

தன் கட்சி ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறித்து திரையுலகைச் சேர்ந்தவர்கள், பத்திரிகையாளர்கள், நண்பர்கள் உள்ளிட்டோருடன், தொலைபேசியில் அவ்வப்போது விஜய் பேசி வருகிறார். இது மட்டுமின்றி, பொது மக்களின் கருத்தை நேரடியாக அறிவதற்கான முயற்சியிலும் அவர் இறங்கியுள்ளார்.

புதுச்சேரியில் படப்பிடிப்பிலுள்ள நடிகர் விஜய், அங்கு மாறுவேடத்தில் சென்று மக்களின் கருத்தை அறிந்து வருகிறார்.

கட்சியை பலப்படுத்துவதற்கு என்னென்ன பணிகளை செய்ய வேண்டும் தன்னிடம் மக்கள் எதை எதிர்பார்க்கின்றனர் என்பதையும் அவர் இதன்போது அறிந்து வருகிறார். (ஐ)

# இணைய பாதுகாப்புச் சட்டம் குறித்து மனித உரிமை ஆணைக்குழு அதிருப்தி

கொழும்பு, பெப். 13

**இலங்கையின் பாராளுமன்றம் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைககைளை புறந்தள்ளி, இணையத்தள நடவடிக்கைகளை கண்காணிக்கும் சட்டத்தை நிறைவேற்றியுள்ளமை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.**

மிகவும் சர்ச்சைக்குரிய இணைய பாதுகாப்புச் சட்டம் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி தனிப்பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. எனினும் உயர் நீதிமன்றம் இது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெருமான்மையினால் நிறைவேற்றப்பட வேண்டுமென கூறியிருந்தது.

"இணையத்தள பாதுகாப்புச் சட்டத்தை கவனமாக ஆராய்ந்த பின்னர், அதிலுள்ள பல பிரிவுகள் உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு அமைவாக இல்லை என்பதும் அதில் பல அம்சங்கள் விடுபட்டுள்ளன" என்பதையும் அவதானிக்க முடிவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைகுழு கூறுகிறது.

உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமையவே இந்த இணையத்தளப் பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என பாராளுமன்றத்தின் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்து மூன்று நாட்கள் கடந்துள்ள நிலையில் இந்த விடயத்தை ஆணைக்குழு வெளிப்படுத்தியுள்ளது.

இந்த சட்டமூலத்திற்கு எதிராக 51 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், கடந்த 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி தீர்ப்பை அறிவித்தது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், ஊடக நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ செயற்பாட்டுக் குழுக்கள் உட்பட பலர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். அவ்வகையில் "மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மாத்திரமே இந்த மசோதாவை சட்டமாக நிறைவேற்ற முடியும்" என் உயர் நீதிமன்ற தீர்ப்பளித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அது மாத்திரமின்றி அந்த சட்டத்தில் திருத்தங்கள் தேவைப்பட்டால் அதை தனிப்பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்ற முடியுமெனவும் நீதிமன்றம் தெரிவித்திருந்ததாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த மனுக்கள் மீதான விசாரணையின் போது அந்த மசோதாவிலுள்ள 56 பிரிவுகளில் 31 திருத்தப்படவேண்டும் என உயர் நீதிமன்றம் கண்டறிந்திருந்தது. எனினும், இந்த பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என ஆணைக்குழு கூறியுள்ளது.

சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தில், இணையதள பாதுகாப்புச் சட்டத்திலுள்ள தொழில்நுட்ப ரீதியிலான தவறுகளை ஆணைக்குழு விபரித்துள்ளது. "அந்த மசோதாவில் இருந்த 30 பிரிவுகள் அரசியல் சாசனத்தின் பிரிவு 12 (1) இசைவாக இல்லை, மேலும் சில அம்சங்கள் பிரிவு 14 (1) (அ) ஆகிய பிரிவுகளுக்கு எதிராக உள்ளன" எனக் கூறியுள்ளது. அந்த திருத்தங்கள் செய்யப்படாத நிலையில், உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கு ஏற்ற வகையில் அந்த சட்டம் இயற்றப்படாமை குறித்து ஆணைக்குழு கரிசனை வெளியிட்டுள்ளது.

"உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை முழுமையாக ஏற்று அதை செயல்படுத்த தவறியமை, அந்த சட்டத்தின் தற்போதைய வடிவம் குறித்தும், பாராளுமன்றத்தில் தேவையான அளவிற்கு வாக்குகளை பெறாமை குறித்தும் ஆழ்ந்த கவலை எழுகிறது" என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் நீதியரசர் எல் டி பி தெஹிதெனிய கூறியுள்ளார்.

"ஆக்கபூர்வமாக நிறுவன ரீதியாக சீர்த்திருத்தங்களை முன்னெடுப்பதில் ஈடுபடாமல், இதை முன்னெடுத்துச் செல்லுவது குறித்து நாங்கள் அரசை எச்சரித்திருந்தோம்" என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சபாநாயகருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளது. (அ)

# துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான பொலிஸ் சார்ஜன்ட் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 13

மல்வத்துஹிரிபிட்ட, பட்டேபொல பிரதேசத்தில் சந்தேக நபர் ஒருவரை கைது செய்யச் சென்றபோது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இந்த பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை மல்வத்துஹிரிபிட்டிய பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவொன்று சந்தேக நபர் ஒருவரை கைது செய்யச் சென்றபோது ஏற்பட்ட மோதல் காரணமாக பொலிஸ் உத்தியோகத்தரின் துப்பாக்கியை பறிக்க முயற்சித்துள்ளனர். அந்நேரத்தில், பொலிஸ் உத்தியோகத்தர் சுடப்பட்டதோடு, சந்தேக நபர் துப்பாக்கியுடன் தப்பிச் சென்றுள்ளார்.

அதற்கமைய , வுனுகம பிரதேசத்தை சேர்ந்த 51 வயதான பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிங்கிரிய, பொலவத்தையில் உள்ள வீடொன்றில் மறைந்திருந்த வேளையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸ் சார்ஜன்டுக்கு சொந்தமான ரிவோல்வர் ரக துப்பாக்கி, 9 எம்.எம். ரவைகள் 03 மற்றும் சந்தேக நபர் வந்த முச்சக்கர வண்டி என்பன பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# எரிபொருளைக் கொள்வனவு செய்ய சீனாவுடன் கைகோக்கும் இலங்கை!

கொழும்பு, பெப். 13

சீன நிறுவனத்துக்கும், இலங்கையின் முதலீட்டுச் சபைக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில், அம்பாந்தோட்டையில் அமைக்கப்படவுள்ள சீன எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து இலங்கைக்கு எரிபொருளைக் கொள்வனவு செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ் ஒப்பந்தத்தின் கீழ், மொத்த உற்பத்தியில் 20 சத வீதத்தை கொள்வனவு செய்ய இலங்கைக்கு உரிமை உள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை இச் சுத்திகரிப்பு நிலையத்தின் முதல் கட்டத்தின்போது சினோபெக் நிறுவனம் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டைக் கொண்டுவரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் இதுவரை எவருமே கைதாகவில்லை

## கூறுகிறார் பொலிஸ் பேச்சாளர்

கொழும்பு, பெப். 13.

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தின் இலங்கை பொலிஸார் இதுவரை எவரையும் கைது செய்யவில்லை என பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஒருவரை கைது செய்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ள நிலையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.




எவரும் இதுவரை நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை. அந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழுவை நாங்கள் இதுவரை ஏற்படுத்தவில்லை என பொலிஸ் பேச்சாளர் கூறினார். (அ)

# பொலிஸ் அதிகாரியை தாக்கிய நால்வர் கைது!

கொழும்பு, பெப். 13

வெலிமடை நகரில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை தாக்கினர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் 4 சந்தேக நபர்கள் வாகனத்துடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு 7:30 மணியளவில், வெலிமடை இலங்கை வங்கிக் கிளைக்கு முன்பாக போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள், வீதியில் நிறுத்தப்பட்டிருந்த கப் வண்டியை சோதனைக்கு உட்படுத்தியபோது, வாகனத்தில் சாரதி மதுபோதையில் இருந்துள்ளார்.

பின்னர் பொலிஸ் அதிகாரிகள் வாகனத்தில் இருந்தவர்களுடன் அதனை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றபோது, அதில் இருந்தவர்கள் பொலிஸ் சார்ஜன்டை தாக்கிவிட்டு வாகனத்துடன் தப்பிச் செல்ல முற்பட்டதாக பண்டாரவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் களுபஹன தெரிவித்தார்.

வெலிமடை பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்று கப் வண்டியையும், நிலையத்திற்கு வந்த இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்ததுடன், அங்கிருந்த மேலும் இரு சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பியோடிய சந்தேகநபர்கள் இருவரும் நேற்று பிற்பகல் வெலிமடை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததாக பொலிஸார் கூறினர்.

பின்னர் பொலிஸார் அவர்களை கைது செய்ததாகவும் அவர்கள் வெலிமடை மற்றும் ஊவா பரணகம பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு உள்ளான பொலிஸ் சார்ஜன்ட் தற்போது வெலிமடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை வெலிமடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் களுபஹன மேலும் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வெலிமடை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பழம், மரக்கறி இறக்குமதிக்கு 13,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு!

கொழும்பு, பெப். 13

கடந்த வருடத்தில் நாட்டிற்கு பழங்கள் மற்றும் மரக்கறிகளை இறக்குமதி செய்வதற்காக 13,000 கோடி ரூபாய் ஒதுக்கிடப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள இறக்குமதி செலவினம் தொடர்பான அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டுக்கு இறக்குமதி மரக்கறி வகைகளுக்காக 11,658 கோடி ரூபாவும், பழங்களுக்காக 1,308 கோடி ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

அதேநேரம், கடந்த ஆண்டில் எரிபொருள் இறக்குமதிக்காகவே அதிகளவில் செலவிடப்பட்டுள்ளது.

அதற்காக மாத்திரம் 153,924 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இது வருடத்தின் மொத்த இறக்குமதி செலவினத்தில் 28 சதவீதமாகும் என இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

இதுதவிர, மருந்து பொருட்களின் இறக்குமதிக்காக 21,778 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (அ)

# சப்ரகமுவ பல்கலையில் மூவரை தாக்கிய ஏழு மாணவர்கள் கைது!

கொழும்பு, பெப். 13

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் விவசாயப் பிரிவில் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்று வந்த மூன்று மாணவர்களை தாக்கிய குற்றச்சாட்டில் அதே பல்கலைக்கழகத்தின் 7 மாணவர்களை கைது செய்துள்ளதாக சமனலவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 9 ஆம் திகதி இரவு வெளியில் இருந்து உணவை எடுத்து வந்து பல்கலைக்கழக சிற்றுண்டி சாலையில் உட்கொண்டு இருந்த சந்தர்ப்பத்திலேயே வேறு சில மாணவர்கள் மின்சாரத்தை துண்டித்து இந்த தாக்குதலை நடத்தி தலைமறைவாகி இருந்து நிலையிலேயே குறித்த மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான இரண்டு மாணவர்களும் ஒரு மாணவியும் தொடர்ந்து பலாங்கொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை சமனலவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# இயந்திரங்களின் செயலிழப்பினால் பணியாளர்களின் முயற்சி பாதிப்பு!

## கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கம்

கொழும்பு, பெப். 13

**நோயாளர் பராமரிப்பு சேவைகளை அதிகபட்ச பங்களிப்புடன் பேணுவதற்கு பணியாளர்கள் முயற்சித்து வருகின்ற போதிலும், பல வைத்தியசாலைகளில் பரிசோதனைகளுக்கான இயந்திரங்கள் செயலிழந்துள்ளமையினால் நாளாந்த சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

பெட் ஸ்கான் இயந்திரங்கள், சி.ரி. ஸ்கான் இயந்திரங்கள் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவில் கதிர்வீச்சு பரிசோதனைகளை மேற்கொள்ளும் மொபைல் ரேடியோகிராபி இயந்திரங்கள் உட்பட பல அத்தியாவசிய பரிசோதனை இயந்திரங்கள் செயலிழந்துள்ளதாக அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளில் பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

அதேநேரம் 150 இற்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்துகள் தற்போது மருத்துவ விநியோகப் பிரிவில் கையிருப்பில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில், மருந்துகள் மில்லியன் கணக்கான டொலர்கள் செலவில் இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவிலான கொள்கலன் முனையங்களில் பாதுகாப்பற்ற முறையில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் வெளிநாட்டு நிறுவனங்கள் ஊடாக இந்த மருந்துகள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

தற்போது இந்த மருந்துகள் வெலிசறை, வத்தளை மற்றும் களனி ஆகிய பகுதிகளில் உள்ள கொள்கலன் முனையங்களில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அத்தியாவசியமான சில தடுப்பு மருந்துகளும் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மருத்துவ விநியோக திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்கள் மருந்துகளை கொள்வனவு செய்த முறைமை தொடர்பில் சட்டமா அதிபரின் பணிப்புரையின் பேரில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (அ)

# திருப்பாடுகளின் நாடக பிரதி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 13

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு இல.17, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் 'கலைஞான சுரபி' தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட மூத்த அருட்தந்தையர்களில் ஒருவரான அருட்தந்தை ம.றெஜி இராஜேஸ்வரன் அடிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதுடன், ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் வழங்குவார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும், புதிதாக இணைந்துகொள்ள விரும்புபவர்களையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வாண்டு திருப்பாடுகளின் நாடகம் மார்ச் மாதம் 21 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரையிலான நான்கு நாட்களுக்கு 'வேள்வித் திருமகன்' என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ. மரிய சேவியர் அடிகளாரால் இறுதியாக எழுதப்பட்ட 'வேள்வித் திருமகன்' திருப்பாடுகளின் நாடகம் முதன் முதலாக 2012 ஆம் ஆண்டிலும், அதனைத் தொடர்ந்து 2014 ஆம் 2016 ஆம் ஆண்டுகளிலும் மேடையேற்றப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றது. தற்போது எட்டு ஆண்டுகளின் பின் மீண்டும் மேடையேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தோல் நோய் அதிகரிப்பு!

## சிறுவர் தொடர்பில் அதிக அவதானம் தேவை

கொழும்பு, பெப். 13

நாட்டில் தற்போது நிலவும் மிகவும் வரண்ட காலநிலை காரணமாக தோல் நோய்கள் அதிகரித்து வருவதாக சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

இந்நிலைமையானது சிறுவர்களுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உள்ள சிறுவர்களுக்கு கூட இந்நாட்களில் குளிப்பதற்கு வாய்ப்பளிக்கவேண்டும்.

சிறுவர்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு தடவைகளாவது குளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் எனவும், ஒருவருக்கு




தோல் நோய்கள் இருப்பின் காலையிலும் இரவிலும் சுமார் 20 நிமிடங்களேனும் நீரில் இருப்பதன் மூலம் ஓரளவு கட்டுப்படுத்த முடியும் எனவும் வைத்தியர் தீபால் பெரேரா குறிப்பிட்டார். (அ)

# வெளிநாடொன்றில் பெண்ணை கடத்தி கப்பம் கேட்ட இலங்கையர்!

கொழும்பு, பெப். 13

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக குடியேறிய ஒருவர் மீது இஸ்ரேலின் அரச வழக்கு தொடுநர் குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்துள்ளார்.

இளம் பெண்ணை கடத்திச் சென்று கப்பம் கேட்டமைக்காகவே அவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர் சட்டவிரோதமாக இஸ்ரேலுக்குள் நுழைந்து பல வருடங்களாக இஸ்ரேலில் வாழ்ந்து, இஸ்ரேலுக்குள் சட்டவிரோதமான முறையில் வேலை பார்த்த இலங்கைப் பிரஜை என்று குற்றப்பத்திரிகை கூறுகிறது.

அவர் இஸ்ரேலில் தங்கியிருந்த காலத்தில், பெண் ஒருவருடன் ஏற்பட்ட பழக்கத்தில் அவர்களுக்கு இடையில் நெருக்கமான உறவு ஏற்பட்டுள்ளதாகவும், எனினும் 2021 ஆம் ஆண்டு ஏப்ரலில் அவர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் அந்த ஆண்டின் பிற்பகுதியில் அவர் மீண்டும் ஜோர்தான் எல்லையின் ஊடாக இஸ்ரேலுக்குள் பிரவேசித்துள்ளார்.

இதனையடுத்து அவர் குறித்த பெண்ணின் மகளை கடத்திச் சென்றதுடன், இலங்கையில் உள்ள தமது தந்தைக்கு குறிப்பிட்ட ஒரு தொகைப் பணத்தை வைப்பிலிட்டால் மாத்திரமே அவரை விடுவிக்கமுடியும் என்று அச்சுறுத்தியுள்ளார்.

எனினும் குறித்த பெண் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டை அடுத்து, வீடொன்றினுள் அடைத்து வைக்கப்பட்டிருந்த பெண்ணை மீட்டதுடன் இலங்கையரையும் கைது செய்தனர்.

இந்நிலையில் பிரதிவாதி நாடு கடத்தப்பட்ட பிறகு சட்டவிரோதமாக நாடு திரும்பியமை, மிரட்டி பணம் பறிக்கும் நோக்கத்திற்காக கடத்தல் செய்தமை, திருட்டு மற்றும் தேவையற்ற தாக்குதல் போன்ற குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இதனையடுத்து அவருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் முடியும் வரை அவரை சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிடவேண்டும் என்று இஸ்ரேலிய அரச தரப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

# இருதய சிகிச்சைக்காக காத்திருப்போர் பட்டியலில் 8,000 இருதய நோயாளிகள்!

கொழும்பு, பெப். 13

கண்டி தேசிய வைத்தியசாலையில் இருதய வடிகுழாய் சிகிச்சைப் பிரிவு ஒன்று சேவையில் இல்லாததால் 8,000 இருதய நோயாளர்கள் சிகிச்சைக்காக காத்திருப்போர் பட்டியலில் இருப்பதாக சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கண்டி தேசிய வைத்தியசாலையில் இவ்வாறான இரண்டு பிரிவுகள் உள்ளன. அதில் ஒரு பிரிவு சேவையில் இல்லாததால் நோயாளர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் பல வைத்தியசாலைகளில் நோயறிதலுக்குத் தேவையான பெருமளவிலான இயந்திரங்கள் சேவையில் இல்லை-என்றார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய, சேவையில் ஈடுபடாத பல இயந்திரங்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளன. எஞ்சிய இயந்திரங்களும் தற்போது பழுது பார்க்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். (அ)

# நாட்டில் போதை மாத்திரைகளை பயன்படுத்தும் போக்கு அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 13

நாட்டில் போதை மாத்திரைகளை பயன்படுத்தும் போக்கு அதிகரித்து வருவதாக காவல் துறை ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நச்சுத்தன்மை வாய்ந்த போதைப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாகவே இவ்வாறு போதை மாத்திரைகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதாக



அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், கடந்த நாட்களில் 3,63,438 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# வாடகை வாகனங்களைப் பாகங்களாக பிரித்து விற்பனை செய்த இருவர் கைது!

கொழும்பு, பெப். 13

நிட்டம்புவ பகுதியில் வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்று அவற்றை பாகங்களாகப் பிரித்து விற்பனை செய்துவந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியிலுள்ள வீடொன்றில் வாகனங்கள் உடைக்கப்படுவதாக தமக்கு கிடைத்த தகவலுக்கமைய, கம்பஹா வலய மோசடி விசாரணைப் பிரிவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பின்போதே குறித்த சந்தேகநபர்கள் கைதாகியுள்ளனர்.

அதன்போது, சுமார் 50 இலட்சம் ரூபா பெறுமதியான மகிழுந்து ஒன்றை பாகங்களாக பிரித்து வைத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்று பாகங்களாக பிரித்து விற்பனை செய்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நெலும்தெனிய மற்றும் நயிவல ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். (அ)

# எட்கா உடன்படிக்கை குறித்து அரசு பெரமுனவுடன் ஆலோசிக்கவில்லை

## சரத் வீரசேகர குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 13

**இந்தியாவுடனான எட்கா உடன்படிக்கை குறித்து அரசாங்கம் பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசிக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குற்றம்சாட்டியுள்ளார்.**

மார்ச் மாத இறுதிக்குள் இந்தியாவுடனான உத்தேச பொருளாதார தொழில்நுட்ப உடன்படிக்கை குறித்த தொழில்நுட்ப பேச்சுக்களை இறுதி செய்வது என்ற அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு சரத் வீரசேகர எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த விடயம் குறித்து அரசாங்கத்தின் பாராளுமன்றக் குழுவினருடன் அரசாங்கம் ஆராயவில்லை. இது குறித்த கலந்துரையாடலும் இடம்பெறவில்லை. உரிய கலந்தாலோசனைகளை மேற்கொள்ளாமல் இறுதி உடன்படிக்கை குறித்த தீர்மானத்தை எடுக்க முடியாது.

எக்டா உடன்பாடு குறித்து ஆளும் பொதுஜன பெரமுன தனது நிலைப்பாட்டை தாமதமின்றி வெளிப்படுத்தவேண்டும். நாட்டில் காணப்படும் அரசியல் சமூக சூழ்நிலைகளை தனது நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி பயன்படுத்தக்கூடாது.

2022 பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா வழங்கிய முன்னொருபோதும் இல்லாத உதவியை இலங்கை பாராட்டுகின்றது. எனினும் நெருக்கடியில் ஒரு நாடு சிக்குண்டுள்ள வேளை அதன் மூலம் பலன்பெற முயலக்கூடாது-என்றார். (அ)

# ரணிலுக்கு இன்று கட்சியே இல்லை எந்த சின்னத்தில் போட்டியிடுவார்?

## கேள்வி எழுப்புகிறார் வசந்த சமரசிங்க

கொழும்பு, பெப். 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்சியே இல்லாத நிலையில், எந்தக் கட்சியில் தேர்தல் போட்டியிடப்போகின்றார் என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய தேசியக் கட்சி மக்களால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. தற்போது செல்வாக்கும் இழந்து விட்டது.

கடந்த பொதுதேர்தலில் தேசியப் பட்டியல் மூலமே அந்த கட்சிக்கு ஆசனம் கிடைத்தது. அந்த ஆசனத்திலேயே ரணில் பாராளுமன்றத்துக்கு வந்து ஜனாதிபதியாகவும் பதவி ஏற்றுள்ளார்.

ஆனாலும், ஐ.தே.கா முற்றாக சிதைந்துபோன கட்சி. ஒரு சிலர் மட்டுமே அதன் பேரால் அரசியல் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

ஐ.தே.க.வுக்கு அரசியல் ரீதியாக பலம் பொருந்திய தலைவர்களும் இல்லை, மக்கள் செல்வாக்கும் இல்லை.

எதிர்வரும் தேர்தல்களில் அந்தக் கட்சியை முன்னிறுத்தி போட்டியிட்டாலும் இதே நிலைதான். அதில் மாற்றம் இருக்காது.

அப்படியான நிலையில் வரப்போகும் தேர்தல்களில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவதாயின் எந்தக் கட்சியில் போட்டியிடுவார்?-என்றார். (அ)

# பெண்களின் ஒத்துழைப்புடன் பலமான அரசை அமைப்போம்

## கூறுகிறார் ஹரினி அமரசூரிய



கொழும்பு, பெப். 13

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுகிறார். ஆனால் குடும்ப பெண்கள் பொருளாதார ரீதியில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். பெண்களின் ஒத்துழைப்புடன் பலமான அரசாங்கத்தை ஸ்தாபிப்போம் எனத் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல் ரீதியில் இதுவரை காலமும் கடைப்பிடித்த தவறான கொள்கையின் பிரதிபலனை இன்று ஒட்டுமொத்த நாடும் எதிர்கொள்கிறது. பொருளாதார ரீதியில் மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுவிட்டதாக ஜனாதிபதி குறிப்பிடுகின்றார்.

பொருளாதார பாதிப்பினால் குடும்பப் பெண்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தமது பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவது தாய்மார் எதிர்கொள்ளும் பிரதான பிரச்னையாகக் காணப்படுகிறது. அரச தலைவர்களின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தினால் குடும்பப் பெண்கள் நுண்கடன் திட்டம் ஒன்ற கோரப்பிடிக்குள் சிக்குண்டுள்ளார்கள்.

பொருளாதாரப் பாதிப்பிலிருந்து மீண்டு விட்டோம் என ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் மாத்திரமே குறிப்பிட முடியும். மக்கள் மத்தியில் அவரால் குறிப்பிட முடியாது. பொருளாதார பாதிப்பிலிருந்து மீள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு நாட்டு மக்களை மேன்மேலும் நெருக்கடிக்குள்ளாகும் செயற்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்படுகிறது-என்றார். (அ)

# மகிந்தவை போன்று எம்மை விலைக்கு வாங்க முடியாது!

## அனுரகுமார திஸாநாயக்க



கொழும்பு, பெப். 13

மகிந்தவை விலைக்கு வாங்கியதை போன்று உலக நாடுகளால் எங்களை விலைக்கு வாங்க முடியாது. இந்திய விஜயத்தின் போது பல விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டன. நாட்டின் தேசிய வளங்களைத் தாரை வார்க்க ஒத்துழைப்பு வழங்குவதாக நாங்கள் குறிப்பிடவில்லை. காலவோட்டத்துக்கு பின்னர் உலகமும், அரசியலும் மாற்றமடைந்துள்ளது. ஆகவே நாங்களும் மாற்றமடைந்துள்ளோம் என்று இந்திய வெளியுறவு அமைச்சரிடம் குறிப்பிட்டோம் எனத் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடு என்ற ரீதியில் தனித்துச் செயற்பட முடியாது. சகல தரப்பினரின் ஒத்துழைப்புடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும். நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நாட்டுக்கு முன்னுரிமை வழங்கும் வகையிலான வெளிவிவகாரக் கொள்கையில் இருந்து கொண்டு நாங்கள் செயற்படுவோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய அரசாங்கத்தின் உத்தியோகப்பூர்வ அழைப்புக்கு அமைய இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தேன். இந்திய விஜயம் குறித்து சஜித் பிரேமதாச, மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரசிங்க ஆகியோரின் தரப்பினர் கலக்கமடைந்து பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளன. அக்குற்றச்சாட்டுக்களைக் கண்டு நாங்கள் கலக்கமடையவில்லை.

தற்போது எதிரணி எமக்கும் அவர்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானதும் ஒன்றிணைவார்கள். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தேர்தல் காலத்தில் ஒன்றாக மேடையேறுவார்கள். அதே போல் மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் 2019 ஆம் ஆண்டு போல் கூட்டணியமைப்பார்கள். ரணிலுக்கும், சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் தனிப்பட்ட முரண்பாடுகள் காணப்படுவதால் அவர்கள் ஒன்றிணைவது நிச்சயமற்றதாக உள்ளது. ஒருவேளை ஒன்றிணையலாம்.

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அனைவரும் நண்பர்கள். தேர்தல் காலத்தில் மாத்திரம் கொள்கை ரீதியில் வேறுபாடுகள் உள்ளதாக மக்கள் மத்தியில் காட்டிக்கொள்வார்கள். தேர்தல் முடிந்த பிறகு வெற்றி பெறும் நபருடன் இணக்கமாகச் செயற்படுவார்கள். காலம் காலமாக இந்த போலி மாற்றமே இடம் பெறுகிறது. இம்முறை இது மாற்றமடைய வேண்டும்.

2024 ஆம் ஆண்டு இடம் பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தீர்மானமிக்கது. எமது கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு எம்மிடம் ஊடக செல்வாக்கு கிடையாது. ஒரு சில ஊடகங்கள் அரசியல்வாதிகள் வசமுள்ளதால் எமக்கு முறையான அங்கீகாரம் கிடைப்பதில்லை. துரதிஸ்டவசமாக நாங்கள் இந்த தேர்தலில் தோல்வியடைந்தால் சோர்வடைய போவதில்லை. நாட்டுக்கு தீங்கு ஏற்படுத்திய இந்த முறையற்ற அரசியல் கலாச்சாரத்தை முழுமையாக இல்லாதொழிக்க தொடர்ந்து முயற்சிப்போம். -என்றார். (அ)

# மரக்கறிகளின் விலை வீழ்ச்சி!



கொழும்பு, பெப். 13

யாழ்ப்பாணத்தில் அறுவடை செய்யப்பட்ட மரக்கறிகள் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு கொண்டுவரப்பட் டதையடுத்து, உயர்வடைந்துவந்த மரக்கறி வகைகளின் விலை 65 முதல் 70 வீதம் வரை குறைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பகுதியில் விளைவிக்கப்பட்ட கரட், கறி மிளகாய், உருளைக் கிழங்கு போன்ற மரக்கறிகள் இவ்வாறு அதிகளவில் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

அதற்கமைய, மொத்த விலையில் 1,000 முதல் 2,000 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கரட் நேற்று காலை 500 முதல் 600 ரூபாய் வரை குறைந்துள்ளது. (அ)

# கொடிகாமத்தில் விபத்து; 2 பேர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், பெப். 13

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் பஸ் ஒன்று உழவு இயந்திரமொன்றும் மோதியதில் இரண்டு வாகனங்களின் சாரதிகளும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை காலை, வீதியில் பயணித்துக் கொண்டிருந்த உழவு இயந்திரத்துடன் தனியார் பஸ் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தின்போது காயமடைந்த இரண்டு வாகனங்களின் சாரதிகளும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# மண்ணெண்ணெய் விலை உயர்வு மீனவர்களுக்குப் பெரும் பாதிப்பு!



அம்பாறை, பெப். 13

**கிண்ணியா பிரதேச மீனவர்களின் வாழ்வாதாரம் மண்ணெண்ணெய் விலையேற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

பல மீனவர்கள் கடற்தொழிலை நம்பி வாழ்கின்றனர்.

தோனா,உப்பாறு, கண்டலடி ஊற்று, கட்டையாறு, ரஹ்மானிய நகர், பெரியாற்றுமுனை, குறிஞ்சாக்கேணி முதலான பகுதிகளிலுள்ள கடற்தொழிலாளர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மீன்பிடித் தொழிலாளர்கள், மீன் வியாபாரிகள், அதனோடு தொடர்புடைய தொழிலாளர்கள் உட்பட சுமார் 1500 இற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மண்ணெண்ணெய்க்குச் செலவழித்து கடலுக்குச் சென்று மீன்பிடித்து வருகின்றபோது மண்ணெண்ணெய் செலவை தவிர வேறொன்றும் கிடைப்பதில்லை என அவர்கள் கூறினர்.

# தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்பு பதிவு நடமாடும் சேவை



திருமலை, பெப். 13

பிறப்பு,இறப்பு மற்றும் திருமண பதிவுகள் தொடர்பான நடமாடும் சேவை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கமைய “புதிய கிராமம்- புதியநாடு”எனும் தொனிப் பொருளின் கீழ் இடம்பெற்றன.

இதில் பிறப்பு, இறப்பு, திருமண பதிவுச் சான்றிதழ்கள் இல்லாதவர்களுக்காக சான்றிதழ்களை பெற்றுக் கொடுத்தல் மற்றும் தேசிய அடையாள அட்டை சிக்கல்களை தீர்த்தல், காணி பிரச்சனைகளுக்கான தீர்வுகளை பெறல் என பல சேவைகளை பொதுமக்கள் பெற்றுக் கொண்டனர். (அ)

# காற்றினால் உடைந்தது படகு



அம்பாறை, பெப். 13

சாய்ந்தமருது பிரதேசத்தில் படகு இறங்குதுறை இல்லாத காரணத்தால் கடற்பரப்பில் நங்கூரம் இடப்பட்டிருந்த கல்முனையைச் சேர்ந்த மீனவர் ஒருவருடைய ஆழ்கடல் இயந்திரப் படகு கடலில் வீசிய பலத்த காற்றினாலும் அலையின் வேகத்தினாலும் இரண்டாக உடைந்துள்ளது.

படகு இரண்டாக உடைந்த நிலையில் படகின் இயந்திரம் கடலில் மூழ்கியுள்ளது.

உடைந்த இயந்திர படகின் பாகங்களை கரைக்கு கொண்டு வருவதில் பிரதேச மீனவர்கள் கனரக வாகனத்தை பயன்படுத்தியுள்ளனர்.

இதே வேளை நூற்றுக்கும் அதிகமான ஆழ்கடல் இயந்திரப்படகுகள் தற்போதும் சாய்ந்தமருது கடற்பரப்பில் நங்கூரம் இடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. (அ)

# முஸ்லிம் காங்கிரஸ் கிளை புனரமைப்பு

அம்பாறை, பெப். 13

சாய்ந்தமருது 21ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள 05,07,09 கிராம சேவகர் பிரிவுகளுக்கான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்புக்கூட்டம் நேற்று முன் தினம் சாய்ந்தமருது 21ஆம் வட்டார வேட்பாளர் பாமி மன்சூர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும், கலைக்கப்பட்ட வட-கிழக்கு மாகாண சபையின் உறுப்பினருமான ஏ.எல்.அப்துல் மஜீத் முஸ்லிம், காங்கிரஸ் பொருளாளரும், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பைசல் காசீம், கட்சியின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர்,பிரதி தேசிய அமைப்பாளரும்,முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, அம்பாறை



மாவட்ட குழுவின் செயலாளரும்,முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன்,முன்னாள் கல்முனை மாநகர சபை பிரதி முதல்வரும், சாய்ந்தமருது அமைப்பாளருமான பிர்தெளஸ்,முன்னாள் கல்முனை மாநகர சபை பிரதி முதல்வர் ஏ.ஏ.வசீர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (அ)

# மாவட்ட செயலருக்கு கௌரவம்

நிந்தவூர், பெப். 13

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரமவுக்கு, அவரது இன,மதபேதமற்ற அளப்பரிய சேவைகளைப் பாராட்டி மாவட்டத்தின் முக்கிய முஸ்லிம் பிரதேசமான நிந்தவூரில் கௌரவம் அளிக்கப்பட்டது.

நிந்தவூர் பிரதேச செயலக ஊழியர் நலன் புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில், “சுதந்திர இரவுகள்” எனும் தலைப்பில் இடம்பெற்ற வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வில்வைத்தே, நிந்தவூர் மக்கள் சார்பில் மாவட்ட செயலாளருக்கு இந்த கௌரவம் அளிக்கப்பட்டது.

நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எம்.அப்துல் லதீப் தலைமையிலும், பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச்சங்கத்தலைவரும், நிருவாக உத்தியோகத்தருமான எம்.ரீ.எம்.சரீமின் நெறிப்படுத்தலிலும் கோலாகலமாக இடம்பெற்ற சுதந்திர இரவுகள் நிகழ்வில், மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரம பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

நிகழ்வின் முக்கிய அங்கமாக மாவட்ட செயலாளருக்கான



கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரமவுக்கு, விசேட கிரீடம் அணிவிக்கப்பட்டு, பொன்னாடை போர்த்தியும், நினைவுச்சின்னம் வழங்கியும் கௌரவம் அளிக்கப்பட்டது.

நிந்தவூர் மக்கள் சார்பிலான இந்த கௌரவம் தொடர்பில் மகிழ்ச்சி தெரிவித்த மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரம,

பாமர மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெற்று கடமையாற்றும் நாம் அந்த மக்களுக்கு திருப்திகரமான, அர்ப்பணிப்பான சேவைகளை ஆற்றுவதன் மூலமே, இத்தகைய கௌரவங்களுக்கு உட்பட முடியும், இதனையே நான் கௌரவமாக எதிர்பார்க்கின்றேன்” எனக் கூறினார். (அ-06)

# ஐக்கிய காங்கிரஸ் கட்சி என்பது இனவாத, மதவாதக் கட்சியல்ல!

அம்பாறை, பெப். 13

ஐக்கிய காங்கிரஸ் கட்சி என்பது இனவாத, மதவாத கட்சியல்ல இக்கட்சியின் இலக்கு என்பது மூவினங்களையும் இணைத்து எதிர்காலத்தில் பலமான தேசிய கட்சியாக வேண்டும் என்பதுதான். ஜனாதிபதி ஒருவரையாவது இக்கட்சி பெற வேண்டும் என்பதும் எமது இலக்காகும். இவ்வாறு ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீட் விடுத்துள்ள ஊடக அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அவ்வாறாயின் கட்டாயம் சிங்கள சகோதரர்களையும் இக்கட்சியின் தலைவர்களாக நியமிக்கும்போதுதான் எமது அந்த இலக்கை அடைய முடியும்.

தற்போது எமது கட்சியின் ஸ்தாபக தலைவராக முஸ்லிம் ஒருவர் இருக்கிறார். இதன் தலைவராக தமிழ் சகோதரரும் அறிவிக்கப்படுவார். அடுத்த வருடங்களில் சிங்களவர் கூட கட்சியின் தலைவராக வருவார். அதற்கான முயற்சிகளும், பேச்சுவார்த்தைகளும் உள்ளன.

ஒரு முஸ்லிம் மௌலவியால் ஆரம்பிக்கப்பட்ட இக்கட்சி, மூவினங்களையும் இணைத்து பெரியதொரு தேசிய கட்சியாக வரும்பட்சத்தில் இது இந்நாட்டின் மிகப்பெரிய வரலாறாக அமையும்.

இந்த உண்மை புரியாமல் எமது கட்சியில் இருந்த இருவர் முஸ்லிம் மட்டும்தான் தலைவராக இருக்க வேண்டும் என இனவாதமாக பேசி வருகின்றனர். தமிழரோ, சிங்களவரோ தலைவராக வருவது என்றால் கட்சியை விற்றுவிட்டதாக மக்களுக்கு பொய் சொல்லி கட்சிக்கு எதிராக செயற்படுவோம் என எம்மை அச்சுறுத்துகிறார்கள்.

இந்த பூச்சாண்டிக்கெல்லாம் இக்கட்சித்தலைமை அச்சப்படாது. இலட்சியம் மட்டுமே எமது இலக்கு. அதற்கான பணிகளை முடுக்கி விட்டுள்ளோம். என்றோ ஒரு நாள் இறைவன் உதவியால் இக்கட்சிக்கு முஸ்லிம், சிங்கள, தமிழ் எம்பீக்கள் கிடைக்கும் எனற நம்பிக்கை எனக்கு உள்ளது-எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-06)

# லெபனான் மீது தாக்குதல் நடத்தினால் நெத்தன்யாகுவின் கதை முடிந்துவிடும்!

## ஈரான் வெளிவிவகார அமைச்சர் எச்சரிக்கை



தெஹ்ரான், பெப். 13

**லெபனான் மீது இஸ்ரேல் முழு வீச்சிலான பெரிய தாக்குதல்களை நடத்தினால், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவின் கதை முடிந்து விடும் என ஈரானிய வெளிவிவகார அமைச்சர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹியன் எச்சரித்துள்ளார்.**

லெபானின் மீது பாரிய தாக்குதலை நடத்த இஸ்ரேல் எடுக்கும் எந்த நடவடிக்கையாக இருந்தாலும் அது நெத்தன்யாகுவின் இறுதி முடிவாக இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

காஸாவில் நடைபெறும் பேர் அதன் அண்டை நாடுகளுக்கும் பரவலாம் என்ற பதற்றமும் அச்சமும் காணப்படும் நிலையில், ஈரானிய வெளிவிவகார அமைச்சர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

லெபானின் ஹஸ்புல்லா, ஹமாஸ் உட்பட மத்திய கிழக்கில் இயங்கும் பல ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவு வழங்கி வரும் ஈரானின் வெளிவிவகார அமைச்சர், லெபனான் தலைநகர் பெய்ரூட்டுக்கு மூன்றாவது முறையாக நேற்று விஜயம் செய்தார்.

இஸ்ரேலின் சியோனிச ஆட்சி ஒருபோதும் இரு முனைகளில் போராட முடியாது. காஸா புதைகுழியில் இருந்து வெளியேற நெத்தன்யாகு போராடி வருகிறார்.

காஸாவில் ஏற்பட்டுள்ள பிரச்னை ஒரு அரசியல் தீர்வை நோக்கி நகர்ந்து வருகிறது.

எனினும் நெத்தன்யாகு தன்னை தற்காத்து கொள்ள போர் மூலம் தீர்வை தேடி வருகிறார் எனவும் அப்துல்லாஹியன் குறிப்பிட்டுள்ளார். (அ)

# பாகிஸ்தானில் மலரும் புதிய கூட்டணி ஆட்சி!



இஸ்லாமாபாத், பெப். 13

பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீப்பின் கட்சியும் பிலாவல் பூட்டோ கட்சியும் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்கத் தீர்மானித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.


அண்மையில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் இம்ரான் கான் கட்சி 93 இடங்களிலும், நவாஸ் ஷெரீப் கட்சி 75 இடங்களிலும், பிலாவல் பூட்டோ கட்சி 54 இடங்களிலும் வெற்றி பெற்றதோடு ஏனைய கட்சிகள் 42 இடங்களை பிடித்துள்ளன.

இந்நிலையில் மொத்தமாக உள்ள 264 இடங்களில் ஆட்சியைப் பிடிக்க 133 இடங்கள் தேவை என்பதால் நவாஸ் ஷெரீப்பின் கட்சி பிலாவல் பூட்டோ கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்க முடிவு செய்துள்ளனர்.

இதே வேளை மேலும் 5 உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்பதால் சுயேட்சை வேட்பாளர்களையே அல்லது சிறிய கட்சிகளையோ அவர்கள் இணைத்துக் கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தென் கொரியாவை மேலும் ஆத்திரமூட்டும் வடகொரியா

## பல ரொக்கெட் லோஞ்சர்களை பரிசோதித்துள்ளது



பியொங்யாங், பெப். 13

தென்கொரியாவை முக்கிய எதிரியாக அறிவித்துள்ள வட கொரியா, தொடர் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

வடகொரியா அண்மையில் பல ரொக்கெட் லோஞ்சர்களை பரீட்சித்து பார்த்தது. அதில் 240 மில்லி மீற்றர் பாலிஸ்டிக் ரொக்கெட் லோஞ்சர்கள் வெற்றிகரமாக இலக்கு நோக்கிச் செலுத்தப்பட்டுள்ளன.

ரொக்கெட் லோஞ்சர்கள் மற்றும் பாலிஸ்டிக் கட்டுப்பாட்டு அமைப்பை உருவாக்குவதில் இந்த சோதனை முக்கியமானதாக இருக்கும் என வட கொரியாவின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.


கடந்த ஜனவரி மாதம், அயல் நாடான தென் கொரியாவின் எல்லையில் உள்ள ஒரு தீவில் வட கொரியா பீரங்கி குண்டுகளை பயன்படுத்தி பயிற்சிகளில் ஈடுபட்டது.

வடகொரியா மீது தாக்குதல் நடத்தினால் தென் கொரியாவை அழித்து விடுவோம் என கிம் ஜோங் உன் அண்மையில் அந்நாட்டு பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் வடகொரியாவின் இராணுவத் திறனை மேலும் அதிகரிக்க பாதுகாப்பு அதிகாரிகளுடன் கிம் ஆலோசனைகளை நடத்தி வருவதாக கூறப்படுகிறது. (அ)

# பைடனின் நினைவாற்றல் குறித்து கடும் விமர்சனங்கள் முன்வைப்பு!

## அதை பிரசாரக் கருவியாக பயன்படுத்தும் குடியரசு கட்சி



நியூயோர்க், பெப். 13

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெற உள்ள நிலையில், மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனின் வயது மற்றும் அவரது நினைவாற்றல் தொடர்பான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், அமெரிக்காவின் முன்னாள் வெளிவிவகார ராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன், பைடனின் வயது குறித்து முக்கிய கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

செய்தி நிறுவனம ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில், பைடனின் வயது தொடர்பான பிரச்னை நியாயமானது என ஹிலாரி கிளின்டன் கூறியுள்ளார்.

வயது காரணமாக, பைடனின் நினைவாற்றலில் பல குறைபாடுகள் கண்டறியப்பட்டதாக அண்மையில் வெளியான அறிக்கை ஒன்றில் தெரியவந்துள்ளது.

இந்த பிரச்னை குறித்து வெள்ளை மாளிகையும் கவனத்தில் கொண்டுள்ளது. மற்றொரு ஜனாதிபதியான டொனால்ட் டிரம்ப் விடயத்தில் வயதுப் பிரச்னை உள்ளது.

இளம் வாக்காளர்களை ஈர்ப்பதில் இருவரும் சிரமங்களை சந்திக்க நேரிடும். வயது ஒரு பிரச்சினையாக இருந்தாலும், வாக்காளர்கள் சிறந்த வேட்பாளரை தெரிவு செய்வது முக்கியம். பைடன் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட வேண்டும்.

அவர் பல நல்ல செயல்களை செய்த பெருமைக்குரியவர் எனவும் ஹிலாரி கிளின்டன் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் ஜோ பைடனும், குடியரசு கட்சி சார்பில் டிரம்ப்பும் மீண்டும் போட்டியிட அதிக வாய்ப்புகள் உள்ளன.

இதனிடையே ஜோ பைடனின் நினைவற்றால் குறைந்துள்ளமைக்கான போதுமான ஆதாரங்கள் வெளியாகியுள்ள நிலையில், இந்த பிரச்னை அமெரிக்காவில் விவாதப் பொருளாக மாறியுள்ளது. மேலும் குடியரசு கட்சியின் இதனை பலமான பிரசாரக் கருவியாக பயன்படுத்தி வருகின்றனர்.

எது எப்படி இருந்த போதிலும் தனது நினைவாற்றல் தொடர்பாக வெளியாகியுள்ள அறிக்கையில் உள்ள விடயங்கள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை எனக் கூறி ஜோ பைடன் அந்த அறிக்கையை நிராகரித்துள்ளார். (அ)

# கட்டாரில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 8 இந்தியக் கடற்படை வீரர்கள் விடுதலை!

கட்டார், பெப். 13

கட்டாரில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இந்தியர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களில் ஏழு பேர் நாடு திரும்பியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன.

இந்திய கடற்படையின் முன்னாள் வீரர்கள் 8 பேர், கட்டாரில் உளவு பார்த்ததாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டனர். இதனையடுத்து, அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இந்த வழக்கில் இந்திய மத்திய அரசு தலையிட்டதுடன் கைது செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினர் சார்பில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் வழக்கை விசாரித்த மேல் முறையீட்டு நீதிமன்றம், மரண தண்டனையை சிறை தண்டனையாகக் குறைத்தது. தொடர்ந்து அவர்களை இந்தியா அழைத்துவரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, கட்டார் அரசர் ஷேக் தமிம் பின் ஹமாத் இருவருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின பலனாக இந்திய கடற்படை முன்னாள் வீரர்கள் 8 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலையான 7 பேர் விமானம் மூலம் நேற்று அதிகாலை டில்லி விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

“பிரதமர் மோடியின் தலையீடு இல்லாமல் நாங்கள் தாயகம் திரும்புவது சாத்தியப்பட்டிருக்காது. இந்திய அரசின் தொடர் முயற்சியினாலேயே நாங்கள் இங்கே இருக்கிறோம்” என விடுதலையானவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “கட்டாரின் அல் தஹாரா குளோபல் என்ற தனியார் நிறுவனத்துக்காக பணியாற்றிவந்த இந்திய கடற்படையின் முன்னாள் வீரர்கள் 8 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய அரசாங்கம் கட்டார் நாட்டின் இந்த நடவடிக்கையை வரவேற்கிறது. விடுவிக்கப்பட்ட 8 பேரில் 7 பேர் நாடு திரும்பியுள்ளனர். அவர்களை விடுவித்து இந்தியா திரும்புவதை சாத்தியப்படுத்திய



கட்டார் அரசினை நாங்கள் வெகுவாகப் பாராட்டுகிறோம்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடுவேன்!

## ரணில் விக்கிரமசிங்க உறுதி

கொழும்பு, பெப். 13

**இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தாம் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இந்திய செய்தி சேவை ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலின்போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்துள்ளமை குறித்து கவலை தெரிவித்த ஜனாதிபதி விக்கிரமசிங்க, "இந்தியாவின் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் எதையும் நாடு அனுமதிக்காது" என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் மீண்டும் வருவதற்கு நான் போட்டியிட வேண்டும். பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதை முதல் கடமையாகக் கொண்டுள்ளேன். திவால்நிலையிலிருந்து மீள்வதில் கவனம் செலுத்துவதே இலக்காகும். நான் மீண்டும் ஜனாதிபதவிக்காக போட்டியிட எதிர்பார்த்துள்ளேன்-என்றார்.



(அ)

# துப்பாக்கிச் சூட்டில் சிறுமி படுகாயம்!

கொழும்பு, பெப். 13

மீகொட பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்றிரவு துப்பாக்கி சூட்டு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ள நிலையில் சிறுமி ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடையொன்றில் திருட முற்பட்ட குழுவொன்றே இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளது.

மீகொட பொருளாதார மத்திய நிலையத்திற்குள் அத்துமீறி ஆயுதங்களுடன் நுழைந்த இருவர் கடையொன்றை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அப்போது கடையில் இருந்த சிறுமியின் வயிற்றில் மூன்று தடவைகள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

வர்த்த நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமெராவில், சந்தேக நபர்கள் பணத்தை கொள்ளையிடுவது பதிவாகியுள்ளது.

சம்பவ இடத்திற்கு முன்பாக பொலிஸ் நிலையம் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

துப்பாக்கிச் சூடு நடத்திய இரண்டு சந்தேக நபர்களும் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

காயமடைந்த சிறுமி ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(அ)

# பேலியகொடை மீன் சந்தை வளாகத்தில் சோலர் பொருத்துவதற்கு நடவடிக்கை

கொழும்பு, பெப். 13

பேலியகொடை மீன் சந்தை வளாகத்தில் சோலர் அமைப்பு பொருத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொண்டு வருவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை பேலியகொடை மீன் வர்த்தக வளாகத்துக்கு விஜயம் மேற்கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை கூறினார்.

இதன்போது இங்கு பல பிரச்னைகள் கலந்துரையாடப்பட்டதுடன் பல பிரச்னைகள் பூர்த்தி செய்யப்படும் என அமைச்சர் தெரிவித்தார் .

இங்கு சோலர் அமைப்பு நிறுவும் வேலைதிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதன் பின்னர் பேலியகொடை மீன் சந்தை வளாகத்தின் மின்சாரக் கட்டணம் குறைக்கப்படுவதுடன் சந்தை வளாகத்திற்கு பெருமளவு வருமானம் கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

மேலும், மீன் சந்தை வளாகத்தின் தூய்மையில் சிறப்பு கவனம் செலுத்துமாறும், மீன் சந்தை வளாகத்தின் சுகாதாரம் சீர்கெடாமல், நல்ல நிலையில் இருக்க அனுமதிக்குமாறும் அதிகாரிகளை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

வளாகத்தில் நாய்களின் எண்ணிக்கை அதிகரிப்பது தொடர்பில் கலந்துரையாடிய அமைச்சர், அவற்றை அகற்றுவதற்கு பொருத்தமான வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறும் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

சொகுசு வாகனங்கள் ரகசியமாக பதிவு;

# மோட்டார் திணைக்களத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட 7 பேருக்கு எதிராக வழக்கு!

கொழும்பு, பெப். 13

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தைச் சேர்ந்த ஐவர் உள்ளிட்ட 07 பேருக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு, வழக்கு தாக்கல் செய்துள்ளது.

இலங்கை சுங்கத்தினால் அனுமதி பெறப்படாத பெருமளவிலான கார்களை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு பாரிய நட்டம் ஏற்பட்டமை தொடர்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அனுமதி வழங்கப்படாத சுமார் 400 கார்களை திணைக்களம் பதிவு செய்துள்ளமை குறித்து தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு பதிவு செய்யப்பட்டவற்றில் 156 வாகனங்கள் குறித்த உரிய தகவல்களை ஆணைக்குழு அதிகாரிகள் கண்டறிந்துள்ளதுடன் அவற்றில் பெரும்பாலானவை சொகுசு வாகன வகையைச் சேர்ந்தவை என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், இந்த வாகனங்கள் பல ஆண்டுகளுக்கு பிறகு போலியாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்படுவதால், அரசுக்கு ஏராளமான வரி இழப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட வாகனங்களில் 7 வாகனங்களை தற்போதைய உரிமையாளர்களிடம் இருந்து பெற்று இலங்கை சுங்கத்தில் ஒப்படைக்குமாறு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி 06 வாகனங்கள் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் 05 வாகனங்கள் இலங்கை சுங்க பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பணி இடமாற்றத்தால் ஏற்பட்ட விரக்தியால் அபிவிருத்தி உத்தியோகத்தர் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 13

பணி இடமாற்றம் காரணமாக ஏற்பட்ட மனவிரக்தியால், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிர்மாய்த்துள்ளார்.

டச்சு வீதி மூளாய், சுழிபுரம் பகுதியை சேர்ந்த பேரம்பலம் புனிதா (வயது 49 ) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடமை புரிந்து வரும் நிலையில் இடமாற்றம் கிடைத்தது. இடமாற்றத்தை இரத்துச் செய்வதற்கு அவர் முயற்சித்துள்ளார். ஆனால் முயற்சிகள் பலனளிக்கவில்லை.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(அ)

# முட்டை விலை உயரலாம்!

கொழும்பு, பெப். 13

இவ் வருடம் இறக்குமதி செய்யப்பட்ட 7 மில்லியன் முட்டைகள் எதிர்வரும் வாரத்தில் லங்கா சதொசவுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலம் அண்மித்து வருவதனால் சந்தையில், முட்டைகளின் விலையை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, தற்போது சதொச சிறப்பங்காடிகளிலும், சில்லறை வர்த்தக நிலையங்களிலும் முட்டைகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை என நுகர்வோர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

அதேநேரம், உள்ளூர் முட்டை ஒன்றின் விலை 65 ரூபாவாக அதிகரிக்கலாம் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

(அ)

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 13

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இதன்படி, இந்த மாதத்தின் கடந்த 8 நாட்களில் மாத்திரம் 60,122 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அத்துடன், கடந்த மாதத்தில் 2 இலட்சத்து 82 ஆயிரத்து 53 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக அந்த சபை தெரிவித்துள்ளது.

ரஷ்யாவில் இருந்தே அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இதன்படி, ரஷ்யாவில் இருந்து 8,755 சுற்றுலாப் பயணிகளும், இந்தியாவில் இருந்து 8,369 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியில் இருந்து 4,423 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். (அ)

# விகாரையின் யானைக்கு விசம் கொடுத்தவர் கைது!

கொழும்பு, பெப். 13

கதிர்காமம் ஸ்ரீ அபிநவராம விகாரையின் பராமரிப்பில் இருந்த 'அசேல' என்ற யானைக்கு விசம் கொடுத்த சம்பவம் தொடர்பான பிரதான சந்தேக நபர் சுமார் 6 மாதங்களாக தலைமறைவாக இருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி, கட்டுகித்துல, பன்வில பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் வேறு சில குற்ச் சம்பவங்களுக்காக கண்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே யானைக்கு விசம் கொடுத்தமை தெரிய வந்துள்ளதாகவும் கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கதிர்காமம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதுடன் பொலிஸாரை கண்டிக்கு அனுப்பி சந்தேக நபரை அழைத்து வந்ததாகவும் கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

## சீனாவுடன்...

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களின் இந்திய பயணம் தொடர்பில் தெளிவு படுத்தும் விசேட ஊடக சந்திப்பு கொழும்பில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகருடன் நடைபெற்ற சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட விஜித ஹேரத் கூறியவை வருமாறு:-

“ இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகருடனான சந்திப்பின்போது அரசியல், பொருளாதாரம் உள்ளிட்ட காரணிகள் பற்றி பேசப்பட்டாலும் பிராந்திய பாதுகாப்பு தொடர்பிலேயே கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. பூகோள அரசியல் போட்டியால் பிராந்திய பாதுகாப்புக்கு சிற்சில அச்சுறுத்தல்கள் உள்ளன. இது தொடர்பில் அவர் (இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர்) தரப்பில் கூடுதல் அவதானம் செலுத்தப்பட்டது. இதன்போது எமது நாட்டின் இறைமையை பாதுகாத்துக்கொண்டு, பிராந்திய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது என நாம் கூறினோம்.

எமது நாட்டு பொருளாதாரம், பாதுகாப்பை நாம் முதலில் உறுதிப்படுத்த வேண்டும். எமது நாட்டு பாதுகாப்புக்கு பிராந்திய பாதுகாப்பும் மிக முக்கியம். இந்த நிலைப்பாட்டில் இருந்தே நாம் செயற்படுவோம். சீனாவுடன் கொடுக்கல் - வாங்கலில் ஈடுபடவேண்டாம் என இந்தியா எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூறவில்லை. நாமும் அது பற்றி பேசவில்லை. பிராந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட இடமளியோம் என்ற விடயத்தை கூறினோம்.” - என்றார். (அ)

## 500 ஏக்கர்...

ருந்தனர்.

இந்நிலையில், நேற்று மீண்டும் குரும்பசிட்டி, வசாவிளான், கட்டுவன், கட்டுவன் மேற்கு, குப்பிளான் வடக்கு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய வகையில் 500 ஏக்கரை சுவீகரிக்கும் வகையில் இரகசியமாக நிலங்களை அளவிடும் முயற்சி இடம்பெறுகின்றது என அறிந்து அப்பகுதியில் குவிந்த மக்கள், தமது எதிர்ப்பை வெளியிட்டு தமது நிலங்களை அளவீடு செய்ய அனுமதிக்க முடியாது எனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களின் போராட்டத்தையடுத்து நில அளவையைக் கைவிட்டு அதிகாரிகள் திரும்பிச் சென்றனர். (அ-03)

## தமிழ் அரசுக்குள்...

செயலாளர் உட்பட நிர்வாகத் தெரிவு மத்திய குழுவில் இறுதி செய்யப்பட்டு பொதுச் சபையில் விடப்பட்ட வேளை பொதுச் செயலாளர் பதவியில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக வாக்கெடுப்பின் பின்னர் மாநாடு ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கு தீர்வு எட்டும் வகையில் கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் வவுனியாவில் நேற்று முன் தினம் சந்திப்பு இடம்பெற்றது.

நீண்ட நேரம் நடைபெற்ற சந்திப்பின் அடிப்படையில் திருகோணமலையைச் சேர்ந்த ச.குகதாசன் மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த சிறிநேசனுக்குத் தலா ஒரு வருடம் பொதுச்செயலாளர் பதவியை வழங்கவும், அதன்படி முதலாவது வருடத்தை குகதாசனுக்கு வழங்குவது எனவும், இரண்டாவது வருடத்தை சிறிநேசனுக்கு வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு 19ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெறவுள்ளது. (அ)

## சி. ஐ. டி....

விபத்து குறித்து சந்தேகம் உள்ள தாகவும் அது தொடர்பான முறையான விசாரணை நடத்த வேண்டுமெனவும் சனத் நிஷாந்தவின் மனைவியான சட்டத்தரணி சாமரி பிரியங்கா குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பொருளாதார...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன,

“ 2023 ஆம் ஆண்டு வரி விதிப்பின் மூலம் பெறப்பட்ட அரச வருமானம் 3201 பில்லியன் ரூபாவாகும். நிவாரணங்கள், சம்பளம் மற்றும் அரச கடன்கள் ஆகியவற்றிற்காக திறைசேரியிலிருந்து செலவிடப்பட்ட தொகை 4394 பில்லியன் ரூபாவாகும். அரச செலவில் எப்பகுதி குறைக்கப்படும் என்பதை மாற்றுக் கருத்துள்ள குழுக்கள் மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரப் பிரச்னைகளுக்கு அரசியல் தீர்வுகள் இல்லை என ஜனாதிபதி தனது சிம்மாசன உரையில் குறிப்பிட்டார். 2022 இல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி பற்றி மக்களுக்குத் தெரியும்.

அதிலிருந்து நாட்டை மீட்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டத்தினால் இலங்கையின் பொருளாதாரம் இன்று சாதகமான நிலையை எட்டியுள்ளது.

கடந்த ஆண்டு தொடர்பில் குறிப்பிடுவதாயின், வரிப் பணம் உட்பட மொத்த அரச வருமானம் 3201 பில்லியன் ரூபாவாகும். அதற்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் 1550 பில்லியன் ரூபாவும், இலங்கை சுங்கத்தினால் 923 பில்லியன் ரூபாவும், மதுவரித் திணைக்களத்தினால் 169 பில்லியன் ரூபாவும், மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் 20 பில்லியன் ரூபாவும் பங்களிப்புச் செய்துள்ளன. இந்தத் தொகை திறைசேரிக்குக் கிடைத்த வருமானம் ஆகும். ஆனால் கடந்த வருடம் திறைசேரியால் செலவிடப்பட்ட பணத்தின் அளவு 4394 பில்லியன் ரூபாவாகும்.

நிவாரணங்கள், அரச கடன்கள், அரச ஊழியர்களுக்கான சம்பளம் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், திறைசேரியில் இருந்து 13,292 பில்லியன் ரூபா உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக செலவிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக எரிபொருள் வழங்கப்படுகிறது. எரிவாயு வரிசைகள் இல்லை. தடையற்ற மின் விநியோகம் இருக்கிறது. அரச ஊழியர்களுக்கு குறித்த திகதியில் சம்பளம் வழங்கப்படுகிறது. இந்த செயற்பாடுகள் மூலம் ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார வேலைத்திட்டத்திற்கு மாற்றாக வேறுவழி எதுவும் இல்லை என்பது நிரூபணமாகியுள்ளது.

அதிகாரத்தைப் பெறுவதற்காக மேடைகளில் சில குழுக்கள் பல்வேறு பொய்யான அறிக்கைகளை வெளியிட்டாலும், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு என்ன வேலைத் திட்டத்தை மேற்கொள்வோம் என்பதை அந்தக் குழுக்கள் மக்களுக்குக் கூற சொல்ல வேண்டும். நிவாரணப் பகுதியை குறைக்கிறார்களா? இல்லை என்றால் அரச கடன் பகுதியை குறைக்கிறார்களா? அல்லது அரச உழியர்களின் சம்பளத்தில் கைவைக்கிறார்களா? என்பதை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்-என்றார். (அ)

## கைச்சாத்திட...

மீண்டும் நெருக்கமான உறவை கட்டியெழுப்பியதுடன், இந்தியாவுடன் வர்த்தக உறவுகளை விரிவுப்படுத்த எட்கா எனப்படும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை கைச்சாத்திடும் பேச்சுகளை நடத்தியது.

எட்கா ஒப்பந்தத்துக்கு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலுவான ஆதரவையும் வழங்கினார். ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு எதிரான போராட்டங்களை அரசியல் உள்நோக்கம் கொண்டவை எனவும் குற்றம் சாட்டினார்.

கடுமையான போராட்டங்கள் வெடித்தமையால் 2018ஆம் ஆண்டில் எட்கா தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவந்த அனைத்துப் பேச்சுகளும் தற்காலிமாக இடைநிறுத்தப்பட்டன.

இந்த நிலையில், கடந்த டிசெம்பர் மாதம் முதல் மீண்டும் எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கான பேச்சுகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

கடந்த ஆண்டு நடுப்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்திய பயணத்தின் போது இதற்கான உடன்பாடுகள் எட்டப்பட்டிருந்தன.

எட்கா உடன்படிக்கையை கைச்சாத்திட அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கடுமையாக எதிர்த்துள்ளார். எட்கா உடன்படிக்கையை கைச்சாத்திட 2016-2018 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மொத்தம் 11 சுற்று பேச்சுகள் நடந்தன.

2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் நவம்பர் 1ஆம் திகதி வரை கொழும்பில் 12 ஆவது சுற்றுப் பேச்சு நடைபெற்றது.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இன்றுவரை நடைமுறையில் உள்ளது.

இதேவேளை, எட்கா உடன்படிக்கை தொடர்பில் 13ஆவது சுற்றுப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் அரசின் தகவல் அறியும் வட்டாரங்களில் அறிய முடிகிறது.

எட்கா உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு எதிராக கடுமையான போராட்டங்களை நடத்த பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி சுயாதீனமாக செயல்படும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## இந்தியாவுடன்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, மற்றும் மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் ஜக்நாத் ஆகியோர் கலந்துகொண்ட இலங்கை மற்றும் மொரீஷியஸில் ஒருங்கிணைந்த கட்டண சேவைகள் மற்றும் மொரீஷியஸில் ரூபே கார்ட் சேவைகளை ஆரம்பிக்கும் மாநாடு காணொலி மூலம் நேற்று நடைபெற்றது.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில்,

எனது இந்திய விஜயத்தின் தொலைநோக்கு பார்வையை இலக்காக கொண்டு பல விடயங்கள் ஆராய்ந்திருந்தேன்.

அத்துடன் இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தி அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய விடயமே இந்த பணப் பரிமாற்ற முறை ஆகும்.

இது எமக்கு மிகவும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். இதன்மூலம் தமிழ்நாடு, மும்பை ஆகியவற்றுடன் இலங்கை தொடர்புகளை ஏற்படுத்த முடியும்.

இதனால் 4 இலட்சம் வர்த்தகர்கள் பயனடைவார்கள். இந்திய வெளியுறவு அமைச்சருடனான பேச்சு நம்பிக்கைக்குரிய முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகின்றது-என்றார். (அ)

## தெரிவுக்குழு...

நிகழ்த்திய அக்கிராசன உரையின் போது, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்த போது தான் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் அமர்ந்து இருந்தே இதற்கு காரணம் எனவும் சம்பிக்க கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அக்கிராசன உரையை நிகழ்த்துவதற்காக அண்மையில் பாராளுமன்றத்திற்கு வந்தார்.

ஜனாதிபதி உரையை ஆரம்பிக்கும் போது, எதிர்க்கட்சி தலைவரும், எதிர்க்கட்சியின் அமைப்பாளரான லக்ஷ்மன் கிரியெல்லவும் சபையில் இருந்த எழுந்து சென்றனர்.

அதற்கு மறுநாள் ஜனாதிபதியின் அக்கிராசன உரை தொடர்பான விவாதம் நடந்தது. அதில் உரையாற்ற நானும் நேரத்தை ஒதுக்குமாறு கேட்டிருந்தேன்.

நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக முதல் நாள் எனக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் எனக்கு நேரம் வழங்கப்படவில்லை.

ஏன் எனக்கு நேரத்தை ஒதுக்கவில்லை என நான் லக்ஷ்மன் கிரியெல்லவிடம் கேட்டேன். ஜனாதிபதி அக்கிராசன உரையின்போது வெளிநடப்புச் செய்யாது, சபையில் இருந்தவர்களுக்கு விவாதத்தில் உரையாற்ற நேரத்தை ஒதுக்க வேண்டாம் என எதிர்க்கட்சி தலைவர் கூறினாரென தெரிவித்தார்.

நாங்கள் வேறு கட்சியை சேர்ந்தவர்கள் எங்களை பற்றிய தீர்மானங்களை எதிர்க்கட்சி தலைவர் எப்படி எடுக்க முடியும் என நான் கேட்டேன்.

நான் சுயாதீனமான உறுப்பினர் என்பதால், எதிர்க்கட்சி தலைவரால் அப்படி செய்ய முடியாது. ஜனாதிபதியின் உரையை புறக்கணிக்கப்போவதாக ஏன் முன்கூட்டியே அறிவிக்கவில்லை என கேட்டேன்.

தலைவர் எழுந்து செல்லும்போது அவருக்கு பின்னால் எழுந்து செல்ல வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும் என கிரியெல்ல கூறினார்.

எவருக்கும் அடிமையாக இருக்க நாங்கள் தயாரில்லை. இந்த சம்பவத்தை அடிப்படையாக கொண்டே அரச நிதி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு உட்பட இரண்டு தெரிவுக்குழுக்களின் தலைவர் பதவியில் இருந்து நான் நீக்கப்பட்டுள்ளேன்.

இதன் பின்னணியில் சாராய முதலாளிகளும், சீனி இறக்குமதி மோசடியாளர்களும் இருக்கின்றனர்.

திருட்டு சாராய முதலாளிகளின் கொள்ளை, சீனி வரி ஏய்ப்பாளர்கள்,வரி செலுத்தவர்கள் குறித்து தகவல்களை வெளியிட்டதன் காரணமாக பழிவாங்கும் நோக்கில் இதனை செய்துள்ளனர்.

ரஞ்சன் ராமநாயக்க கூறுவது போல் இவர்கள் எல்லோரும் நண்பர்கள்.

நாட்டின் மதுபான போத்தல்களில் இருக்கும் போலி ஸ்டிக்கர் ஒட்டப்படும் மோசடியை நாங்கள் வெளியில் கொண்டு வந்தோம்.

இதனால், அரசின் வருமான பில்லியன் கணக்கில் அதிகரித்தது. இறுதியில் என்ன நடந்தது, மதுவரி திணைக்கள ஆணையாளருக்கு வீட்டுக்கு செல்ல நேரிட்டது.

அத்துடன் நாட்டுக்கு பல பில்லியன் ரூபா பணத்தை சம்பாதித்து கொடுத்த எனக்கும் தெரிவுக்குழுக்களின் தலைவர் பதவி இல்லாமல் போனது. ஒரு கோடி ரூபாவுக்கும் மேல் வருமான வரி செலுத்தாத ஆயிரத்து 272 பேர் இருக்கின்றனர். இந்த பட்டியலை வெளியிட்ட பின்னர், அதில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த அமைச்சர் ஒருவர் ஆத்திரப்பட்டார்.

இதனால் எனது பதவி பறிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# சரத் பொன்சேகாவின் அறிவிப்பு விரைவில்!

கொழும்பு, பெப். 13

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகி சுயாதீனமாகச் செயற்படும் அறிவிப்பொன்றை பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா விரைவில் வெளியிடுவார் என்று அறியமுடிகின்றது.

எதிர்வரும் வாரத்திற்குள் அவர் அது தொடர்பான அறிவிப்பை வெளியிடுவார் என்று நம்பகமாக தெரிகிறது.

முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி தயா சந்தகிரி ஆகியோரை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைத்துக் கொண்டமை தொடர்பில் சரத் பொன்சேகா அண்மையில் கடுமையாக விமர்சித்திருந்தார்.

இந்நிலையில், அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ எச்சரித்துள்ளார்.

எனினும், கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு முன்னதாக கட்சியின் தவிசாளர் பதவியை இராஜினாமா செய்து, அங்கத்துவத்தில் இருந்தும் விலகிக் கொள்ள சரத் பொன்சேகா தீர்மானித்துள்ளதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# இன்று முதல் மீண்டும் பணிப்புறக்கணிப்பு!

**சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு**

கொழும்பு, பெப். 13

72 சுகாதார தொழிற்சங்கங்கள் இன்று காலை 6 மணி முதல் மீண்டும் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வைத்தியர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள 35,000 ரூபாய் மேலதிக கொடுப்பனவு, தமக்கும் வழங்கப்படவேண்டுமென வலியுறுத்தி 72 சுகாதார தொழிற்சங்கங்கள் பல தடவைகளில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தன.

இந்த விடயம் தொடர்பில் நிதியமைச்சின் அதிகாரிகளுக்கும், சுகாதார தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

குறித்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையில் தொடர் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களினது கூட்டமைப்பின் இணைப்பாளர் சானக்க தர்மவிக்ரம குறிப்பிட்டார்.

# சிறுவர்களுக்கு சிகரெட் விற்ற 8 கடை உரிமையாளர்கள் கைது

கொழும்பு, பெப். 13

சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 8 கடை உரிமையாளர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹிக்கடுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான பாடசாலைகளுக்கு அருகில் கடைகளை நடத்தி வந்த 8 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் முன்னெடுத்த விசாரணையின் பிரகாரம் சந்தேகத்திற்குரிய கடை உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த கடைகளில் இருந்த சிகரெட்டுக்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

பாடசாலைகளுக்கு அருகாமையில் முன்னெடுக்கப்படும் வகுப்புகளுக்கு வரும் பாடசாலை மாணவர்களுக்கும் குறித்த சந்தேக நபர்கள் சிகரெட்டுக்களை விற்பனை செய்துள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டுள்ள விசேட நடவடிக்கையின் மூலம் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. (அ)

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழியவேண்டும்

**மரிக்கார் எம்.பி வலியுறுத்து**

கொழும்பு, பெப். 13

**2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.**




கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவேண்டும்.

ஆனால் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவும் மொட்டும் தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பதற்காக தேர்தலை ஒத்திவைத்து, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் வேலைத்திட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒத்துழைப்பை வழங்காது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை பற்றி அரச சார்பற்ற நிறுவனங்கள் பேசுகின்றன.

ஆனால் வரிச்சுமையை குறைப்பது குறித்து அரச சார்பற்ற அமைப்புக்கள் பேசவில்லை.

9 இலட்சம் வீடுகளுக்கு மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டபோது ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

குழந்தைகள் மயக்கம் போட்டு விழுந்த போது ஒரு வார்த்தை கூட பேசவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருக்கவேண்டும்.

ஆனால் பாராளுமன்றத்திற்கு மூன்றில் இரண்டு பெருன்பான்மை அதிகாரம் இல்லை. நாட்டை இரத்தக் கடலாக மாற்றும் நெருக்கடியைத் தவிர்க்க மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு வாய்ப்பு வழங்குங்கள். மக்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குங்கள். அவ்வாறு வழங்கும் பட்சத்தில் மக்கள் தங்கள் விருப்பப்படி முடிவுகளை எடுப்பர்-என்றார். (அ)

# காமினி ஜயவிக்கிரமவின் வீட்டுக்கு ஜனாதிபதி ரணில் நேரில் பயணம்!

கொழும்பு, பெப். 13

குருநாகல் மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கியஸ்தரும், முன்னாள் அமைச்சருமான காமினி ஜயவிக்ரம பெரேராவின் இல்லத்திற்கு ஜனாதிபதி திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கட்டுகம்பலை தொகுதி அமைப்பாளராக செயற்பட்ட காமினி ஜயவிக்கிரமவின் மகன், அசங்க பெரேரா ஜயவிக்கிரமவை நேற்று முன்தினம் அப்பதவியில் இருந்து கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ அகற்றியிருந்தார்.

அவருக்குப் பதில் இரண்டு இணை அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று அசங்க பெரேராவின் தகப்பனார் காமினி ஜயவிக்கிரமவின் கட்டுகம்பலை வீட்டுக்கு ஜனாதிபதி ரணில் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

காமினி ஜயவிக்கிரம பெரேராவிடம் சுகம் விசாரித்த பின்னர், காமினி ஜயவிக்கிரம பெரேராவின் கடந்த கால அரசியல் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி சிலாகித்துள்ளார்.

இதன்போது ஜயவிக்ரம மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடிய ஜனாதிபதி வீட்டுக்கு அருகில் கூடியிருந்த பிரதேச மக்களுடனும் உரையாடியுள்ளார்.



முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், காமினி ஜயவிக்ரம பெரேராவின் புதல்வரான வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அசங்க ஜயவிக்ரம, பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்டோர் இந்த நிகழ்வின்போது உடனிருந்துள்ளனர். (அ)

# நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை நீக்கத்தில் கவனம் செலுத்தும் ரணில்!

**கூறுகின்றார் மைத்திரிபால**

கொழும்பு, பெப். 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவது குறித்து ஆராய்ந்து வருகின்றார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவது குறித்து ஆராய்வதற்காக சட்டத்தரணிகள் குழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார். சர்வஜன வாக்கெடுப்பா பாராளுமன்ற தேர்தலா முதலில் இடம்பெறும் என தெரியாத நிலை காணப்படுகிறது.

முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையிலான குழுவொன்றை நிறைவேற்று அதிகாரமுறை நீக்கம் தொடர்பாக ஆராய்வதற்காக ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

ஜனாதிபதி அரசமைப்பு சீர்திருத்தத்திற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

பாராளுமன்ற தேர்தலா அல்லது சர்வஜன வாக்கெடுப்பா முதலில் வரும் என சொல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. இது உங்கள் மத்தியில் காணப்படும் கேள்வி மாத்திரமல்ல எனக்கும் இந்த கேள்வி உள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவிடமும் இதற்கான விடையில்லை-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## மக்ஸ்வெல் 5ஆவது சதம்!

அடிலெய்ட்,பெப். 13

இருபது - 20 போட்டிகளில் அதிக சதங்கள் அடித்த வீரர் என்ற பெருமையை ஆஸி. வீரர் மக்ஸ்வெல் ரோஹித் சர்மாவுடன் பகிர்ந்து கொண்டார்.

அடிலெய்டில் நேற்றுமுன்தினம் பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது ரி - 20 நடந்தது.

இதில், அவுஸ்திரேலியாவின் அதிரடி வீரரான கிளென் மக்ஸ்வெல் 12 பௌண்ட்ரிகள், 8 சிக்ஸர்களுடன் 55 பந்துகளில் 120 ஓட்டங்களை விளாசினார்.

இது அவரின் 5ஆவது ரி - 20 சதமாகும். இதன்மூலம் ரோஹித் சர்மாவின் ரி - 20 சதங்கள் எண்ணிக்கை சாதனையை சமன் செய்தார்.

இருபது - 20 போட்டிகளில் அதிக சதங்கள் அடித்த வீரர் என்ற பெருமையை ரோஹித் சர்மா வைத்திருந்தார். இப்போது, அதனை மக்ஸ்வெல் சமன் செய்துள்ளார். (ஐ)

## ஆப்கானுடனான ஒருநாள் போட்டி: தொடர் இலங்கை அணி வசமானது




கண்டி, பெப். 13

இலங்கை வந்துள்ள ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது.

முதல் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றது. இதையடுத்து இந்த இரு அணிகள் இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி பல்லேகலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இலங்கை அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கிய நிசாங்க 18 ரன், பெர்னாண்டோ 5 ஓட்டங்களை எடுத்து அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதையடுத்து குசல் மெண்டிஸ் மற்றும் சதீரா சமரவிக்ரம ஜோடி சேர்ந்தனர். இருவரும் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி விளையாடி, அரைச்சதம் அடித்து அசத்தினர்.

இதில் மெண்டிஸ் 61 ஓட்டங்களிலும் சம்ரவிக்ரம 52 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இதையடுத்து சரித் அசலங்க மற்றும் ஜனித் லியனகே இருவரும் இணைந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதில் ஜனித் லியனகே அரைச்சதம் அடித்த நிலையில் 50 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய அசலங்க 74 பந்துகளில் 97 ஓட்டங்களை எடுத்தார்.

இறுதியில் இலங்கை அணி 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 308 ஓட்டங்கள் எடுத்தது. ஆப்கானிஸ்தான் தரப்பில் அஸ்மத்துல்லா ஓமர்சாய் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதையடுத்து 309 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் அணி விளையாடியது. தொடக்கத்தில் குர்பாஸ் 8 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். தொடர்ந்து இப்ராஹிம் சத்ரன் , ரஹ்மத் ஷா இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடினர்.

தொடர்ந்து நிலைத்தாடி ஓட்டங்கள் குவித்த இருவரும் அரைச்சதம் அடித்து அசத்தினர். பின்னர் இப்ராஹிம் சத்ரன் 54 ஓட்டங்களும் , ரஹ்மத் ஷா 63 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர் .

தொடர்ந்து வந்த வீரர்கள் இலங்கை அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் 153 ஓட்டங்களில் 10 விக்கெட்களையும் இழந்து ஆப்கானிஸ்தான் அணி ஆட்டமிழந்தது. இலங்கை அணி 155 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இலங்கை சார்பில் ஹசரங்க 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதனால் 3 போட்டிகள் கொண்ட தொடரில் 2-0 என இலங்கை தொடரை கைப்பற்றியது. (ஐ)

## இளையோர் உலகக் கிண்ணம்: இந்தியாவை வீழ்த்தி ஆஸி. அணி சம்பியன்




பெனோனி, பெப். 13

இளையோர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிச் சுற்றில் அவுஸ்திரேலிய அணி 79 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

இளையோர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் பெனோனி நகரிலுள்ள வில்லோமூர் பார்க் மைதானத்தில் நடைபெற்ற இறுதிச் சுற்றில் இந்தியா, அவுஸ்திரேலிய அணிகள் மோதின.

முதலில், துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 253 ஓட்டங்கள் எடுத்தது. அணியில் அதிகப்டசமாக ஹர்ஜாஸ் சிங் 64 பந்துகளில் 55 ஓட்டங்கள் எடுத்து, சௌமி பாண்டே பந்தில் வீழ்ந்தார். ஹாரி டிக்ஸன் 42, சாம் கோன்ஸ்டாஸ் 0, ஹூக் வெய்ப்ஜென் 48, ரியான் ஹிக்ஸ்20, ஒலிவர் பீக் 46, ராப் மெக்மில்லன 2, சார்லி அண்டர்சன் 13, ரொம் ஸ்டிராக்கர் 8 ஓட்டங்கள் சேர்த்தனர்.

இந்திய அணி சார்பில் ராஜ் லிம்பானி 3, நமன் திவாரி 2 விக்கெட்களை சாய்த்தனர்.

இதைத் தொடர்ந்து 254 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி விளையாடியது.

அவுஸ்திரேலிய வீரர்களின் அபார பந்துவீச்சால் இந்திய வீரர்கள் ஆட்டமிழந்து வெளியேறிக் கொண்டே இருந்தனர். அணியில் அதிகபட்சமாக ஆதர்ஷ் சிங் 47 ஓட்டங்கள் எடுத்தார். முருகன் அபிஷேக் 42 ஓட்டங்கள் சேர்த்தார்.

அர்ஷின் குல்கர்னி 3, முஷிர் கான் 22, அணித்தலைவர் உதய் சஹாரன் 8, நமன் திவாரி 14, சௌமி பாண்டே 2 ஓட்டங்கள் எடுத்தனர்.

இறுதியில் 43.5 ஓவர்களில் இந்திய அணி 174 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. 79 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

அவுஸ்திரேலியாவின் மஹ்லி பியர்ட்மன் 3 விக்கெட்களை வீழ்த்தி ஆட்ட நாயகன் விருதை வென்றார். (ஐ)

## மேற்கிந்தியாவுடனான ரி -20 தொடர் அவுஸ்திரேலியா வசம்!



அடிலெய்ட், பெப். 13

மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் தொடரை அவுஸ்திரேலிய அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து ரி -20 தொடரில் விளையாடி வருகிறது.

இந்நிலையில் ஹோபர்ட்டில் நடைபெற்ற முதலாவது இருபது - 20 போட்டியில் அவுஸ்திரேலியா அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் அடிலெய்ட் நகரில் 2ஆவது ரி- 20 போட்டி நடைபெற்றது.

இதில் முதலில் விளையாடிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 241 ஓட்டங்களைக் குவித்தது. அணியில் அதிகபட்சமாக கிளென் மக்ஸ்வெல் 55 பந்துகளில் 120 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

டேவிட் வோர்ணர் 22, ஜோஷ் இங்லிஸ் 4, மிட்செல் மார்ஷ் 29, ஸ்ரொய்னிஸ் 16 ஓட்டங்கள் எடுத்தனர். ரிம் டேவிட் 14 பந்துகளில் 31 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மேற்கு இந்தியத் தீவுகள் அணி தரப்பில் ஜேசன் ஹோல்டர் 2 விக்கெட்களையும், அல்சாரி ஜோசப், ரொமாரியோ ஷெப்பர்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 242 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கிந்தியத் தீவுகள் அணி விளையாடியது. பிரண்டன் கிங் 5, ஜோன்சன் சார்ள்ஸ் 24, ரோவ்மன் பாவெல் 63, ஜசன் ஹோல்டர் 28 ஓட்டங்கள் எடுத்தனர்.

இறுதியாக மேற்கு இந்தியத் தீவுகள் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 207 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதையடுத்து அவுஸ்திரேலிய அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றது. (ஐ)


# தென்னாசிய வல்லரசாக இந்தியா : ரஷ்யாவுக்கும் தோழன்! அமெரிக்காவுக்கும் நண்பன் !!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

உலகின் பல்வேறு நாடுகளும் ஒன்று அமெரிக்காவுக்கு ஆதரவு நிலைப்பாட்டை எடுத்திருக்கும். அல்லது ரஷ்யாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்திருக்கும். ஆனால், இந்தியா மட்டுமே இரு நாடுகள் உடனும் நல்லுறவை இறுக்கமாக வைத்துள்ளது.

இதற்கான காரணம் என்பது குறித்துப் பார்க்கலாம். இந்திய நாடு சுதந்திரம் பெற்றது முதலே ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே நல்லுறவு இருக்கிறது. 2000களில் இந்தியா அமெரிக்கா இடையேயான உறவும் வலுவானது. இருப்பினும், இந்தியா அமெரிக்கா உறவு என்பது இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே இருக்கும் உறவைப் பாதிக்கவில்லை.

**இந்தியா அமெரிக்கா உறவு:**



இதன் காரணமாகவே உக்ரைன் போர் விவகாரத்தில் இந்தியா நடுநிலை நிலைப்பாட்டை எடுத்தது. உலகின் பல்வேறு நாடுகளும் கூட ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்தாலும் இந்தியா அதுபோல எந்தவொரு தடையையும் விதிக்கவில்லை. இதன் மூலம் இந்தியாவால் இரு முக்கிய நாடுகளான அமெரிக்கா மற்றும் ரஷ்யா இரு தரப்பிடமும் நல்லுறவை வைத்திருக்க முடிந்தது.

21ஆம் நாற்றாண்டில் இந்தியா அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கைக்கு மிக முக்கியமானதாக அமைந்துள்ளது. நூறு கோடி மக்கள் நிறைந்ததும், இந்திய துணைக் கண்டத்தில் ஆதிக்கமுடையதுமான இந்தியா, வளர்ந்து வரும் வல்லரசாகவும், அமெரிக்காவிற்கு இன்றியமையாத சகோதர நாடாகவும், சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கை எதிர்கொள்ளத்தக்கதாகவும் கருதப்படுகிறது.

இதேவேளை 2004இல் 2008 வரையிலான காலத்தில் இருதரப்பு வர்த்தகமும் மும்மடங்காக உயர்ந்துள்ளது. கேல்லப் என்ற நிறுவனம் நடத்திய பொது கருத்துக் கணிப்பின்படி, அமெரிக்கர்கள் உலகில் உள்ள நாடுகளிலேயே இந்தியாவை ஏழாவது அபிமான நாடாக கருதுகின்றனர். அமெரிக்காவில் பயிலும் பன்னாட்டு மாணவர்களுள், இந்திய மாணவர்கள் இரண்டாவது பெரிய எண்ணிக்கையாகும்.

**ரஷ்யா மசகு எண்ணெய் இறக்குமதி**

இந்தியா தனது மசகு எண்ணெய் தேவையைப் பூர்த்தி செய்ய ரஷ்யாவை அதிகம் நம்பி இருக்கிறது. ரஷ்யாவிலிருந்து இந்தியாவின் மசகு எண்ணெய் இறக்குமதி என்பது இவ்வருட அக்டோபர் மாதத்தில் திடீரென உயர்ந்துள்ளதாக இந்திய மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் ஒட்டுமொத்த எண்ணெய் இறக்குமதியில் சுமார் மூன்றில் ஒரு பங்கை ரஷ்யாவில் இருந்து தான் வாங்குகிறார்கள்.


கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சவுதி அரேபியாவில் இருந்து இறக்குமதி 5.87 வீதம் அதிகரித்துள்ளது. அதேநேரம் ஐக்கிய அமீரகம் மற்றும் நைஜீரியாவில் இருந்து செய்யப்படும் இறக்குமதி முறையே 27.94 வீதம் மற்றும் 24.97 வீதம் குறைந்துள்ளது. இது மசகு எண்ணெய் தேவைக்கு எந்தளவுக்கு ரஷ்யாவை சார்ந்து இருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

உலகின் மூன்றாவது பெரிய மசகு எண்ணெய் இறக்குமதியாளரான இந்தியா இதுநாள் வரை பெரும்பாலும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து அதிகம் இறக்குமதி செய்துள்ளது. ரஷ்யாவில் இருந்து மசகு எண்ணெய்யை எடுத்து வரச் செலவு அதிகம் ஆகும் என்பதால் அரிதாகவே ரஷ்யாவிலிருந்து கொள்முதல் செய்தது.

ஆனால், உக்ரைன் போருக்குப் பிறகு மலிவு விலையில் மசகு எண்ணெய் கிடைத்ததால் இந்தியா ரஷ்யாவில் இருந்து தனது கொள்முதலை அதிகப்படுத்தியது.

**இந்திய-அமெரிக்க உறவில் முன்னேற்றம்:**

அணிசேரா இயக்கத்தை உருவாக்கிய நாடுகளில் ஒன்றாக இந்திய இருந்தாலும், இந்தியா, பனிப்போரின் பொழுது சோவியத் ஒன்றியத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தது. இது அமெரிக்க ஐக்கிய நாட்டினுடனான உறவில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியது.



**வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு இந்தியாவின் முக்கியத்துவம் சர்வதேச ரீதியில் உணர்த்தப்பட்டு வருகிறது. ரஷ்யாவுக்கும் தோழனாக, அமெரிக்காவுக்கும் நண்பனாக, இலகுவில் எவரையும் கைக்குள் போட்டுக் கொள்ளும் இராஜதந்திரம், தென்னாசிய வல்லரசாக இந்தியா எழுச்சியுருவதை காணலாம்.**



1991-இல் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட பிறகு இந்தியா, அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளினுடனான தனது வெளியுறவுக் கொள்கைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தது. இதன் காரணமாக இந்திய வர்த்தகம், பொருளாதாரம், கணினி நிறுவனங்களின் இணைப்பு ஆகியவை மேம்படத் தொடங்கியது.

மேலும் இந்தியாவின் அணுசக்தி திட்டம் பற்றியான தனது கொள்கையை அமெரிக்கா மாற்றிக்கொண்டது. தற்காலத்தில் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து கலாசாரம், ராணுவம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் மிகுந்த பங்களிப்புகளில் ஈடுபடுகின்றன.

பிரதமராக மோடி பொறுப்பேற்ற பின்னர் இந்திய-அமெரிக்க உறவில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவின் நெருக்கமான நண்பனாக இந்தியா மாறிவருகிறது என்பதும் உண்மையே.

அத்துடன் சர்வதேச பொருளாதார நெருக்கடி, உக்ரைன் போர், சமீபத்திய சர்வதேசப் பிரச்சினைகளுக்கான தீர்வாக இந்தியா உடனான உறவு மேலும் வலுப்பெற வேண்டும் என அமெரிக்க அதிபர் பைடன் அடிக்கடி கூறிவருகிறார்.


**சோவியத் பனிப் போர் :**

இந்தியா விடுதலை அடைந்து முதல் பல வருடங்கள் வரை, இரு நாடு உறவுகளும் சிறப்பாக இருந்தன. அமெரிக்கா இந்தியாவிற்கு பல்லாயிரம் கோடி மதிப்பிலான உணவுகளையும் சலுகைகலையும் வளர்ச்சி நிதிகளையும் கொடுத்தது.

இந்திய-சீனப் போரின் பொழுதும் கென்னடி அரசு இந்தியாவிற்கு வெகுவாக உதவி செய்தது.

ஆனால்,1963ல் நிக்சன் பதவியேற்றதும் இரு நாடுகளின் உறவு சரியத் தொடங்கியது. இந்திரா காந்தியின் தலைமையில் கீழான இந்தியாவும் சோவியத் ஒன்றியத்துடன் இணக்கமாக செயல்படத் தொடங்கியது. அதே சமயம் அமெரிக்கா பாகித்தானுடன் இணையத் தொடங்கியது.

1971ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் போரில் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்தது. இந்தியாவை அச்சுறுத்த அமெரிக்கா




தனது விமானம்-தாங்கி கப்பல் USS Enterprise-I வங்காள விரிகுடாவில் நிறுத்தியது. 1974-ல் இந்தியா தனது முதல் அணு ஆயுத சோதனையை சிரிக்கும் புத்தர் என்ற பெயரில் நடத்தியது. அமெரிக்கா இதனை வலுவாக எதிர்த்தது.

**இந்தியா மீது பொருளாதார தடை:**

அடல் பிகாரி வாஜ்பாய் இந்தியாவின் பிரதமராக பதவியேற்றதும் போக்ரானில் அணு ஆயுத சோதனை நடத்த அனுமதி அளித்தார். இதன் காரணமாக அமெரிக்கா இந்தியா மீது பல பொருளாதார தடைகளை விதித்தது.

ஆனால் ஜப்பானைத் தவிர வேறு எந்த நாடும் இதனை மதிக்காததால் தடைகள் வெகு சீக்கிரமே நீக்கப்பட்டன.



பிறகு இரு நாடுகளும் உறவை மேம்படுத்த இணைந்து செயல்படத் தொடங்கின.

இரு நாடுகளின் இராணுவ உறவுகளும் சுதந்திரம், ஜனநாயகம், சட்ட ஒழுங்கை கடைப்பிடித்தல், பொதுவான பாதுகாப்பு நலன்கள், ஆகியவையின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை நிலைநாட்டுவது, வன்முறை தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தை தோற்கடிப்பது, பேரழிவு ஆயுதங்கள் மற்றும் அதில் தொடர்புடைய பொருட்கள், தரவு, மற்றும் தொழில்நுட்பங்கள் பரவுவதை தடுப்பது, மற்றும் வர்த்தகத்தை பாதுகாப்பது ஆகியவைய இதனுள் அடங்கும்.

**இரு நாடு இராணுவ உறவு:**

2001 ஆம் ஆண்டின் செப்டம்பர் இறுதியில், அமெரிக்க அதிபர் புஷ் அணு ஆயுத பரவல் தடை தடுப்பு சட்டத்தின் கீழ் இந்தியா மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதார தடைகளை முற்றிலுமாக விலக்கினார்.

இதன் முன்னர், இந்தியா சர்வதேச மரபுகளை மீறி எதிராக அணு ஆயுதங்களை உருவாக்கியதாலும், அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடாததாலும் அமெரிக்கா இந்தியாவுடன் அணு ஒத்துழைப்பு எதிர்த்து வந்தது.

ஆனால், டிசம்பர் 2006 இல், அமெரிக்க காங்கிரஸ், 30 ஆண்டுகளில் முதல் முறையாக, ஹென்றி ஜே ஹைட் அமெரிக்க இந்திய அமைதியான அணு ஒத்துழைப்பு சட்டத்தை தாக்கல் செய்து, இந்தியாவிற்கு நேரடி அணு சக்தி வணிகம் செய்ய அனுமதி அளித்தது.

**போயிங் விமான கொள்வனவு:**

தற்போது 2023 ஜூலையில் அமெரிக்காவின் போயிங் விமான நிறுவனத்திடம் இருந்து டாடா குழுமத்தின் ஏர் இந்தியா விமான நிறுவனம் 290 விமானங்களை வாங்க முடிவு செய்து அதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

போயிங் 737 ஆயுஓ ரகத்தில் 190 விமானங்களையும், போயிங் 787 ரகத்தில் 20 விமானங்களையும், போயிங் 777ஓ ரகத்தில் 10 விமானங்களையும் ஏர் இந்தியா வாங்க உள்ளது. இந்த 220 விமானங்களின் மதிப்பு 34 பில்லியன் டாலராகும்.

இதுமட்டுமின்றி, போயிங் 737 ரகத்தில் கூடுதலாக 50 விமானங்களையும், 787 ரகத்தில் கூடுதலாக 20 விமானங்களையும் ஏர் இந்தியா வாங்க உள்ளது. இதன் மொத்த மதிப்பு 45.9 பில்லியன் டாலராகும். போயிங் விமான நிறுவனத்திடம் இவ்வளவு எண்ணிக்கையில் விமானங்களை வாங்கும் இரண்டாவது நிறுவனம் ஏர் இந்தியா என அமெரிக்க தலைமை செய்தித் தொடர்பாளர் ஜீன் பெர்ரி தெரிவித்துள்ளார்.

இந்திய-அமெரிக்க இடையே உள்ள பன்னாட்டு உறவை மேலும் வலுப்பெற அமெரிக்கா விரும்புவதாக அந்நாட்டின் அதிபர் ஜோ பைடன் தொடர்ந்து தெரிவித்து வருகிறார்.

# ஜேவிபி அநுர குமார திஸாநாயக்கவின் இந்தியா விஜயம் ஏன் முக்கியமானது?

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க இந்தியாவிற்கான விஜயமொன்றை அண்மையில் மேற்கொண்டிருந்தார்.

ஐந்து நாட்கள் விஜயத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் உள்ளிட்ட மூவர் இணைந்துகொண்டுள்ளனர்.

இந்திய அரசாங்கத்தால் விடுக்கப்பட்ட அழைப்பின் பேரிலேயே, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இந்தியா சென்றுள்ளார்.







### இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் அநுர குமார திஸாநாயக்க சந்திப்பு

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவிற்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. இந்த சந்திப்பு புது டெல்லியில் கடந்த ஐந்தாம் தேதி நடைபெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கு இடையிலான தொடர்புகள் மற்றும் இலங்கையின் பொருளாதார சவால்கள் தொடர்பில் இதன்போது ஆலோசிக்கப்பட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சர், தனது எக்ஸ் சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கையின் பொருளாதார சவால்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் பேசப்பட்டதாகவும், அயல் நாட்டுக்கான முன்னுரிமை மற்றும் இந்தியப் பெருங்கடலின் முன்னுரிமை கடல்சார் முன்முயற்சி என்ற கருப்பொருளின் கீழ் இந்தியா எப்போதும் இலங்கையின் நம்பகமான நண்பராகவும் நம்பகமான பங்காளியாகவும் இருக்கும் என்றும் பேசப்பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சரின் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய பிரஜைகளுக்கு சுற்றுலா செல்லும் எண்ணம் இருக்கும் பட்சத்தில், கட்டாயம் இலங்கைக்கு செல்லுமாறு மும்பை நகரில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றின்போது, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் அந்த நாட்டு பிரஜைகளிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

### "நாம் வாக்களித்தாலும், நாட்டின் தலைவரை தெரிவு செய்வது வெளி நபர்கள்"

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க அதிகாரபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியாவிற்கு சென்றுள்ளார்.

இந்தப் பயணம் அரசியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுமா என கொழும்பு பல்கலைக் கழகத்தின் அரசியல் மற்றும் அரச கொள்கை ஆய்வுப் பிரிவின் பிரதானி கலாநிதி பிரதீப் பீரிஸிடம் வினவியபோது:

அதற்குப் பதிலளித்த அவர், "நாட்டு மக்கள் வாக்களித்தாலும், இலங்கைக்கான தலைவரைத் தெரிவு செய்வது நாட்டிற்கு வெளியிலுள்ள நபர்கள்" எனக் கூறினார்." நாட்டைச் சூழவுள்ள பூகோள அரசியலுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபடாமல், இலங்கையின் எதிர்காலத் தலைவராக எப்போதும் வர முடியாது.

"இலங்கையில் இருந்து நாம் வாக்களித்தாலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு வெளியில் உள்ளவர்களால் வாக்குகள் தீர்மானிக்கப்படுகின்றன."

"பெரும்பாலும், அநுர குமார திஸாநாயக்க அல்லது தேசிய மக்கள் சக்தி நாட்டின் தலைமைத்துவத்தைக் கைப்பற்ற எதிர்பார்க்குமானால், கட்டாயம் உலகின் வலுவான நாடுகளுடன் ஏதோவொரு புரிந்துணர்வை வைத்துக்கொள்வது அவசியமாகின்றது."

"அப்படியில்லையென்றால், இலங்கையிலுள்ள பிரதான கட்சி ஒன்றுக்கு அதிகாரத்திற்கு வர முடியாது"

"அதனாலேயே, அநுர குமார திஸாநாயக்க இந்த விஜயத்தில் ஈடுபட்டிருக்கலாம் என நான் நினைக்கின்றேன். அதனாலேயே இந்தியாவும் அழைப்பு விடுத்திருக்கின்றது."

"தென் சீனா மற்றும் தெற்காசியாவின் பூகோள அரசியல் என்றும் இல்லாதளவிற்கு தற்போது தீவிரமடைந்துள்ளது."

"அதற்கான காரணம், தனி அதிகாரத்திற்குப் பதிலாக, கூட்டு அதிகாரம் என்ற கலாசாரத்திற்கு உலகம் தள்ளப்படுகின்றது."

"இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இந்த வளையத்திற்குள் தமது அதிகாரங்களை வைத்துக்கொள்வதற்கு விருப்பம் காணப்படுகின்றது. அதனால், எதிர்காலத்தில் அதிகாரத்திற்கு வரும் நபர்கள் தமது திட்டத்திற்குள் எவ்வாறு இருக்கிறார்கள் என்பது குறித்து அறிந்துகொள்ளும் தேவை அவர்களுக்கு உள்ளது."

"அதனாலேயே அவரை அழைத்திருக்கக்கூடும். அதில் சற்று நேர்மறை அம்சங்களும் காணப்படுகின்றன," என கலாநிதி பிரதீப் பீரிஸ் தெரிவிக்கின்றார்.

'இந்தியப் பெருங்கடல் வளையத்தின் அதிகாரம் மிகுந்த தரப்பினர், தமக்கு அவநம்பிக்கை கொண்ட குழுக்கள் அதிகாரத்தை கைப்பற்றுவதைத் தடுப்பதற்கும், அவ்வாறான குழுக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றும் என எண்ணும் பட்சத்தில் அவர்களுடன் ஏதோ ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வதற்கும் முயற்சி செய்வார்கள்," என அவர் கூறுகின்றார்.

இதில் இரண்டு விடயமே தற்போது இடம்பெற்று வருகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். தேசிய மக்கள் சக்திகளைத் தற்போது அவதானிக்கும்போது, சோசலிச அரசியலில் இருந்து விடுப்பட்டு, நாட்டின் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக சமூக ஜனநாயக அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ளது என அவர் குறிப்பிடுகின்றார்.

### இந்திய ஊடகங்கள் என்ன சொல்கின்றன?

இலங்கையில் தற்போது மிகப் பிரபலமான அரசியல் கட்சியாக விளங்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவருக்கு, இந்தியா அதிகாரபூர்வ அழைப்பை விடுத்துள்ளமையானது அவதானிக்கப்பட வேண்டிய ஒன்று என தி ஹிந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் உள்ளிட்ட தூதுக் குழுவினர் இந்தியாவின் புது தில்லி, அகமதாபாத், திருவனந்தபுரம் ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது அரச அதிகாரிகள், வணிக சமூகத்தைச் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதுடன், விவசாயம் மற்றும் தொழில்சாலைகளைப் பார்வையிடவுள்ளதாகவும் தி ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை குறித்து இலங்கைக்குள் சமூக ஊடகங்களில் கலவையான கருத்துகளைக் கொண்ட பதிவுகள் பதிவேற்றப்பட்டு வருகின்றன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன, தனது எக்ஸ் தளத்தில் இந்த விடயம் தொடர்பில் பதிவொன்றைப் பதிவிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பானது மிகச் சிறந்த நடவடிக்கை எனவும், இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளினால் தயாரிக்கப்படுகின்ற இந்து - பசுபிக் கொள்கை உள்ளிட்ட இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையிலான தொலைநோக்குப் பார்வை குறித்த அறிக்கையை தேசிய மக்கள் சக்தி ஆதரிக்கும் எனத் தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார். அதைச் சாதகமாக்கிக் கொள்வதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குள் திட்டங்களை முன்னெடுக்கும்போது, அதானி குழுமத்திற்கு எந்தவித பிரச்னையும் வராது எனவும், மக்கள் விடுதலை முன்னணி எந்தவொரு எதிர்ப்பையும் இனி தெரிவிக்காது எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சரின் எக்ஸ் தள பதிவிற்குப் பதிலளித்துள்ள பயனாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

### 'நாம் இந்தியாவை எதிர்க்கவில்லை'

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்கவின் இந்திய விஜயமானது அவசரமாக இடம்பெற்றது அல்லவென அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் அதிகாரபூர்வ அழைப்பிற்கு அமைய, முன்னதாகவே இந்த விஜயம் திட்டமிடப்பட்டு இருந்ததாகவும் அவர் கூறுகின்றார்.

இதேவேளை, இந்தியாவிற்கு எதிராக கருத்துகளைக் கொண்ட மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாக சமூக ஊடகங்களில் கருத்துகள் பகிரப்பட்டு வருகின்றமை தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய கருத்து தெரிவித்தார்.

'நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தியாவை எதிர்க்கவில்லை. எமது நாட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான தீர்மானங்களை எடுக்கும்போது நாம் எதிர்ப்பு தெரிவித்தோம். நாம் நாடொன்றை எதிர்க்க மாட்டோம். அது நகைச்சுவையான ஒன்று. எந்தவொரு விடயத்திலும் நாட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் சூழல் காணப்படும் பட்சத்தில், அதை நாம் எதிர்த்தோம்," என அவர் கூறினார்.

(பிபிசி)

# கட்டாரில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த 8 இந்திய முன்னாள் கடற்படையினர் விடுதலை!

கட்டார் சிறையில் அடைக் கப்பட்டிருந்த எட்டு முன்னாள் இந்திய கடற்படையினர் விடு தலை செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சகம் செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், 'கட்டாரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த, தஹ்ரா குளோபல் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த 8 இந்தியர் கள் விடுதலையை இந்திய அரசு வரவேற்கிறது,' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதில், 'எட்டு பேரில் ஏழு பேர் இந்தியா திரும்பியுள்ளனர். இந்த இந்திய குடிமக்களை விடுவித்து தாயகம் திரும்ப அனுமதிக்க கட்டார் எமிர் எடுத்த முடிவை நாங்கள் வரவேற்கிறோம்,' என்று தெரிவிக்கப்பட் டிருந்தது.

முன்னாள் இந்தியக் கடற்படையினர் கட்டாரில் சிறைபிடிக்கப்பட்டிருந்தது இரு நாடுகளுக்கிடையே அரசுமுறை பதற்றத்தை அதிகரித்து வந்தது.

**கட்டாரில் முன்னாள் இந்திய கடற்படை வீரர்கள் ஏன் கைது செய்யப்பட்டனர்?**

இந்த இந்தியர்களை தடுத்து வைத்திருப்பதற்கான காரணத்தை கட்டார் அரசு அதிகாரபூர்வமாக தெரிவிக்க வில்லை. காரணத்தை உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடக அறிக்கைகளின் வாயிலாகவே அறிய முடிகிறது.

அவற்றின்படி, 2022-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30-ஆம் தேதி இரவு, கட்டாரில் உள்ள தாஹ்ரா குளோபல் டெக்னால ஜிஸ் மற்றும் கன்சல்டிங் சர்வீஸ் நிறுவனத்தில் பணியாற்றி வந்த 8 முன்னாள் இந்திய கடற்படையினர், உளவுத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இந்த திடீர் நடவடிக்கைப் பிறகு அவர்கள் அனைவரும் தோஹாவில் உள்ள சிறையில் மற்ற கைதிகளிடமிருந்து தனியாக வைக்கப்பட்டனர். சிறையில் அடைக்கப்பட்ட இந்த இந்தியர்கள், கட்டார் கடற்படைக்காக வேலை செய்யும் ஒரு நிறுவனத்தில் உயர் பதவிகளை வகித்தவர்கள்.

இந்த இந்தியர்களில் மூன்று பேர் ஓய்வு பெற்ற கேப்டன்கள், நான்கு பேர் கமாண்டர்கள் மற்றும் ஒருவர் மாலுமி. இவர்கள் கடந்த ஓராண்டுக்கும் மேலாக 'கடும் குற்றவாளிகளைப்' போல தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர் என்று ஒரு முன்னாள் இந்திய தூதாண்மை அதிகாரி அப்போது கூறினார்.

கைது செய்யப்பட்ட இந்தியர்கள் தோஹாவில் பணிபுரிந்த போது நீர்மூழ்கிக் கப்பல் திட்டம் குறித்து முக்கியமான தகவல்களை இஸ்ரேலுடன் பகிர்ந்து கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர் என்று உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகச் செய்திகள் தெரிவித்தன.

கட்டாரில் இதுபோன்ற குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப் பட்டால் மரண தண்டனை விதிக்கப்படும் சட்டம் உள்ளது. இந்த நிறுவனம் கட்டார் கடற்படைக்காக நீர்மூழ்கிக் கப்பல் திட்டத்தில் பணியாற்றி வந்தது. ரேடாரை தவிர்க்கும் ஹைடெக் இத்தாலிய தொழில்நுட்பத்தின் அடிப்படையில் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பெறுவதே இந்தத் திட்டத்தின் நோக்கம்.

கடந்த 2022-ஆம் ஆண்டு மே மாதம் இந்த நிறுவனத்தை மூட கட்டார் உத்தரவிட்டது. அதன் ஊழியர்களில் சுமார் 70 பேர் மே மாத இறுதிக்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் இந்திய கடற்படையின் முன்னாள் பணியாளர்கள்.

கடந்த 2023-ஆம் ஆண்டு, இவர்களது மரண தண்டனை, சிறைத் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

**இந்திய அரசுக்கு மிகப்பெரிய சவால்**

கடந்த ஆண்டு டிசம்பரில், துபாயில் நடைபெற்ற சிஓபி28 மாநாட்டின் போது, கட்டார் அமீர் ஷேக் தமீம் பின் ஹம்த் அல்தானியை பிரதமர் நரேந்திர மோதி சந்தித்தார். அப்போது, கட்டாரில் வசிக்கும் இந்திய சமூகத்தினரின் நலம் குறித்தும், இருதரப்பு விவகாரங்கள் குறித்தும் பிரதமர் மோதி கேட்டறிந்தார்.

இரு தலைவர்களுக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. இந்த சந்திப்பு குறித்து வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால் கூறுகையில், இருதரப்பு உறவுகள் குறித்து இருவருக்கும் இடையே நல்லமுறையில் விவாதம் நடந்ததாக தெரிவித்திருந்தார்.

இந்திய அரசு, இந்தியர்களுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை குறித்து அனைத்து சட்ட வாய்ப்பு களிலும் செயல்படுவதாகவும் கூறியிருந்தது.

இதற்கிடையில், வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ் ஜெய்சங்கரும் இந்த 8 இந்தியர்களின் குடும்பத்தினரைச் சந்தித்தார். எட்டு முன்னாள் கடற்படை வீரர்களையும் விடுவிக்க மத்திய மோடி அரசுக்கு பெரிய அழுத்தம் எழுந்தது. காங்கிரஸ், ஏ.ஐ.எம்.ஐ.எம் மற்றும் பிற எதிர்க்கட்சிகள் இந்த இந்தியர்களை விரைவில் இந்தியாவுக்கு அழைத்து வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தன.

**எரிவாயு ஒப்பந்தம்**

இந்நிலையில், கடந்த வாரம் இந்தியாவுக்கும் கட்டாருக்கும் இடையே ஒரு முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தம் அடுத்த 20 ஆண்டுகளுக்கானது. அதன் மொத்த செலவு 78 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (6.5 லட்சம் கோடி இந்திய ரூபாய்). இந்தியா 2048-ஆம் ஆண்டு வரை கட்டாரிடம் இருந்து திரவ இயற்கை எரிவாயுவை (எல்.என்.ஜி) வாங்குவதற்கான ஒப்பந்தம்தான் இது.

இந்தியாவின் மிகப்பெரிய எல்.என்.ஜி இறக்குமதி நிறுவனமான பெட்ரோநெட் எல்.என்.ஜி லிமிட்டெட், கட்டாரின் அரசாங்க நிறுவனமான 'கட்டார் எனெர்ஜி'யுடன் இந்த ஒப்பந்தத்தைக் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், கட்தஷடார் ஒவ்வொரு ஆண்டும் 75 லட்சம் டன் எரிவாயுவை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யும்.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தான நிலையில் இந்தியர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

